Registered No. M. 878.

357

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.


| | | |
|---|---|---|
| தொகுதி 2 | 1912௵ பிப்பிரவரி௴ 15௳<br>விரோதகிருது௵ மாசி௴ 4௳ | பகுதி 10. |



ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமிஐயர், B. A., B. L., F. T. S.
} பத்திராதிபர்.



வருஷ சந்தா ரூ. 2 தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம். பக்கம்.


| பொருளடக்கம். | பக்கம். |
| --- | --- |
| ஸர்வகலாசாலை வித்யார்த்திகளுக்கு நற்போதனை—ப. நா. | ௩௨௯ |
| காயத்ரீ இராமாயணம்—பி. எஸ். சுப்பிரமணியஐயர் | ௩௪௩ |
| உண்டிற் சுருங்குதல் பெண்டிர்க் கழகு—சிவராமன் | ௩௫௦ |
| சினதேசத்தைப்பற்றிய சில விஷயங்கள்—ஆத்மநாதன் | ௩௫௩ |
| நோயற்றவாழ்வை யடையும்முறை—சுப்பிரமணியன் | ௩௫௫ |
| புத்தகவரவு—பத்திராதிபர் | ௩௫௭ |
| சமாசாரம்—பத்திராதிபர் | ௩௫௮ |
| பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம். | |



---

## The Swadeshi Life Assurance Co., Ltd,
## BOMBAY.

### ஹெட் ஆபீஸ் பம்பாய்.

மூலதநம் ரூபாய்—பத்து லெக்ஷம்.

Honourable லல்லுபாய் ஸாமல்தாஸ் அவர்கள்—சேர்மென்.

மிஸ்டர் ஜியார்ஜ் கிங் துரை அவர்கள் F. F. A. F. I. A. (London) } ஆக்சுவரி

K. சுப்பிரமணிய அய்யரவர்கள் B. A., F. S. A. A. (London) J. P. ஹானரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட், F. M. U. F. B. U. பம்பாய் } மானேஜர்.

எம் கே. இராஜகோபாலசாரியார் அவர்கள் F. T. S., பப்ளிக் அகவுண்டெண்டு and ஆடிடர் of "K. R Chari Brothers" West Tower Street, Madura. } சென்னைராஜதானியின் சீப் ஏஜண்டு. Chief Agents.

எல். புருஷோத்தமநாயுடுகாரு F. T. S. எடமணல், சீயாழி தாலூகா ஏஜண்டு.

ஜில்லா, தாலூகா, டவுன் ஏஜண்டுகள் தேவை.

தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

வரலாற்று விளம்பரம் (Prospectus) முதலியவைகளுக்கு கே. ஆர். சாரி பிரதர்ஸ், மதுரை என்னும விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்:

Please Compare our rates and conditions before insuring your life with any other company.

Apply for Agencies and other particulars to

Messrs. K. R. CHARI BROTHERS,
*West Tower Street, Madura.*

359

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2 | 1912ஞு பிப்பிரவரிமீ 15உ விரோதகிருதுஞு மாசிமீ 4உ | பகுதி 10.

## *ஸர்வ கலாசாலை வித்யார்த்திகளுக்கு நற்போதனை.

—:(o):—

1. இதுவரையில் கட்டாயத்தின் மேல் கல்வி கற்றீர்கள். இனி பிரியத்துடன் கல்விகற்பீர்கள். உங்களில் சிலர் பொதுப்படிப்பின் ஆகாரத்தின்மேல், சிறப்பு வகையாகக் குறித்த சாஸ்திரப் பயிற்சியில் முயற்சி கொள்வீர்கள். சிலர் உலகவாழ்வின் பெரியபாரத்தை வகிக்கத் தலைப்பட்டிருப்பீர்கள். இக்காலத்தில் பலவாறான உத்தியோகங்களும் லௌகிகத் தொழில்களும் பெருகிக்கொண்டு வருகின்றன. சில சமயத்தில், புத்தியின் இயல்புக்கும் கல்விப் பயிற்சிக்கும் நேர்மையில்லாத உத்தியோகத்தைச் சிலர் பெறும்படியாக ஏற்படும். சிலசமயத்தில் இரண்டிற்கும் நேர்மை அமையும். ஒருவன் தகைமையும் அவன் புகும் உத்தியோகமும், நேர்மைப்பட்டுப் பொருந்துமாகில், அவன் அவ்வுத்தியோகத்தினால் உயர்நலம் பெறுவான் என்பதில் சந்தேகமில்லை. நம்தேசத்தின்

*சென்ற 1911 வருஷம் நவம்பர் மாதம் 23உ ஸர்வகலாசாலையின் வருஷக் கூட்ட(Convocation)த்தில் காலஞ்சென்ற வீ. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்.

பிரகிருத நிலைமையைப் பார்க்கும்போது, அமெரிக்கா கண்டத்தின் ஐக்யமாகாணத்தின் கண்ணுள்ள ஹார் வார்டு கலாசாலையிற்போல, நமது சென்னை கலாசாலையிலும், உத்யோக முறையில் வழிகாட்டும் ஒரு இலாகா ஏற்படுத்தல் நலமெனத் தோன்றுகிறது.

2. உங்களிற் சிலர் பல துறைகளுள்ள இலக்கியங்களில் உத்ஸாகத்துடன் பிரவேசித்துப் படித்து ஆநந்திப்பீர்களாகும். நம் தேசத்தின் பிரகிருத நிலைமையைப்பற்றிச் சிந்திக்குங்கால், பொது வகையான படிப்புமாத்திரம் போதாது என்றும், சிறப்புவகையாக யாதேனும் ஒரு உத்தியோக முறை பற்றிய படிப்பு மிகவும் அவசியமென்றும் அத்தன்மையான படிப்பில் உங்களுடைய முழு முயற்சியும், மந உழைப்பும் இருக்கவேண்டியதென்றும் நீங்கள் அறிவீர்கள். ஒருவன் அப்படிச் செய்யாவிடில், உலக விஷயங்களில் மேன்மை பெருன், முன்னிற்க வரான். மேலழுந்திய படிப்பும் அதில் மநஉழைப்பின்மையும் உயர்நலத்தைப் பயக்காது. ஒரு துறையில் ஆழ்ந்த படிப்பும் அதன்கண் ஆழ்ந்த மந உழைப்பும் உலகத்தில் உயர்நலமுள்ள பதவியைத் தந்திடும். இது திண்ணம். இத்தேசத்திலும் ஏனைய தேசங்களிலும் மேன்மைபெற்ற பெரியார்களின் சரித்திரத்தைப் படிப்பீர்களாகில், "எந்த விஷயத்தில் பிரியமான தீவ்ர உழைப்பும் முயற்சியுமில்லையோ, அதில் பலன் பெறல் இயலாது" என்ற உலக உண்மையை நன்குய் அறிவீர்கள். உலகில் யாதேனும் ஓர் உத்தியோகமுறையில் உயர்நலம் பெறவேண்டின், அதற்கு ஏற்ற படிப்பும், முயற்சியும், தொழிலும், பூர்ணமாய் அமையவேண்டும். தோமஸ் கார்லையில் என்ற மேனுட்டு ஞானியார் சொல்லுகிறபடி, "எல்லாத் தொழிலும் எல்லா முயற்சியும் ஈசுவரகைங்கர்யமாம். கைத்தொழிலாக இருப்பினும், அதன் கண் கூட ஈசுவரஸம்பத்து உளது. தொழில் என்பது இப்பூமிபோல் அகன்று பரவியது. அதன் சிகரம் சுவர்க்கத்தில் உள்ளது." நீங்கள் ஒவ்வொருவரும் தொழிற்படுதல் என்ற பழக்கத்தை விருத்தி செய்தல் வேண்டும். எல்லா சாஸ்திரங்களையும் கற்று மேன்மை பெறலாம் என்ற எண்ணத்தை விடுமின். அது முற்காலத்தில்முடியும். இக்காலத்தில் இயலாது. அவன் அவன் தகைமைக்கு ஏற்ப யாதேனும் ஒரு சாஸ்திரம் அல்லது அதன் பகுதியை நன்குயும்

பூர்ணமாயும் கற்கவேண்டும். அதனால் உங்களுடைய அறிவு குறுகியும், கூட்டில் அடைபட்டது போலவும் ஆகாமல் இருக்கட்டும். உலக யாத்திரைக்குறிய உத்யோகம் செய்வதில், உங்கள் மநம் கூனிக் குறுகிப் போகாமலும், அல்லது அந்த உத்யோக சம்பந்தமாக எல்லாம் தெரிந்தோமென்ற இறுமாப்புக் கொள்ளாமலும் இருமின். உலக ஜீவநத்துக்காக ஒரு உத்யோகத்தில் அமர்ந்து நடைபெறுவதில், அதன் விஷயங்களைத் தவிர வேறு விஷயங்களைப் பிரியத்துடன் கற்காமலும் சிந்தியாமலும் இருப்பீர்களேயாகில், அவ்வுத்யோகத்தை விட்டு இளைப்பாரும் காலத்தில், வயிற்றுப் பிழைப்பு விஷயங்களைத் தவிர, வேறு யாதேனும் ஒரு விஷயத்தில் மநப்பழக்கமில்லாமையால் மநச் சுகாநுபவ மில்லையே என வியசநிக்கும்படி நேரிடாமல், பணம் ஸம்பாதிக்கும் உத்யோகத்தை நடத்துங் காலத்திலும், வேறு யாதேனும் மநத்திற்குப் பிரியமான ஞாநமுறை பற்றிய துறையில் படிப்பும் சிந்தனையும் கொள்ளுமின். பின்பு இளைப்பாருங்காலத்தில் அத்தன்மையான படிப்பும் சிந்தனையும் வாழ்வுக்குச் சந்தோஷத்தையும் நலத்தையும் தரும். நான் அறிய அநேக புத்திமாங்கள், உத்தியோகத்தை விட்டு விலகினால், வாழ்நாள் வெறுமையாக இருக்குமே, அதைச் சுககரமாய்க் கழிக்க இயலாதே என ஏக்கமுற்று மநம் வருந்தி, அதனால் சாகும் வரை, உத்தியோகத்தின் பற்றை விடாமல், வண்டியிற் கட்டிய குதிரை அந்நிலையிலேயே இறந்தாற்போல இறக்கின்றார்கள். அவ்வுத்தியோகத்தை நடத்துங்கால், அதன் வாசனையுடன், வேறு விதமான துறைகளிலும் படிப்பும் பழக்கமும் வைத்திருப்பரேல், உத்தியோகத்தை விட்டு இளைப்பாரும் காலத்தில், ஒப்புரவு என்ற தர்மத்தைக் கடைப்பிடித்தவராய், ஜநோபகாரமான பிறர்நலம் உண்டாகும் கைங்கரியத்தைக் கைப்பற்றிச் செய்பவராய், தங்கள் ஆயுளையும் விருத்தி செய்துகொளல் இயலுமன்றோ?

3. கல்வியின் பெருமையைக் காசால் அளத்தல், அதாவது "உப்புக்கு ஆகுமா புளிக்காகுமா என மதித்தல்," இத்தேசத்தின் பாரம்பரிய ஸம்பிரதாயத்திற்கு முற்றும் விரோதமாம். இத்தேசத்தில் கல்விக்கு இயற்கையாய் உயர்நலம்அமைந்தபெருமைஉண்டு. அதற்கென்றே ஒரு ஜாதி வகுப்பினர் ஏற்பட்டுள்ளார். உலக வா

ழ்வில் உலக ஸம்பத்தை லக்ஷியமாகக்கொண்ட வித்தை உண்டுதான். அஃது அர்த்தகாரிகவித்தை எனப் பெயர்பெறும். இதை விட உபநிஷத் வித்தை என்பது அதிக உயர்நலம் பெற்றது. "யதேவ வித்யயா கரோதி தத்வீர்யவத்தரம் பவதி" எதைச் செய்தாலும், அறிவுடனாகில், அஃது அதிகப்பலனுடையதாகும். இத்தேசத்தின் ஞாததர்சநங்கள் உலகஸம்பத்தை அலக்ஷியஞ்செய்கின்றமையாலும், செய்யும் கர்மம் வீண்போகாமல், காலவிளம்பமானாலும், எப்போதாவது பலன் அளிக்கும் என்ற நன்னம்பிக்கை உண்டுபண்ணுமியல்பினவான: "கர்மம், விதி, ஜந்மாந்தரங்களுண்டு" என்றஅபிப்பிராயம் நடைபெறுகின்றமையாலும், மத சம்பந்தமான பலவித கர்மங்களின் பெருக்காலும், மற்றைய தேசங்களைவிட, இந்த தேசத்தில், கல்விக்கு ஒரு கௌரவமும் அதில் பயில்கின்றவர்களுக்கு மேன்மையும் அதிகமாக அளிக்கப்பட்டு வந்திருக்கின்றன. துவிஜர்கள் பால்யத்தில் குருகுலத்தில் வித்யாப்யாஸத்திற்கு 12முதல் 25வது வரையுள்ள காலத்தைக் கழிக்க வேண்டுமென்பது விதி. சாஸ்திரங்களும் கலைகளும் எல்லாருக்கும் பொதுவானவை. சூத்திரர்கள் அவைகளைக் கற்கவேண்டுமெனக் கட்டாயமான விதியில்லை. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரஹ்மாவின் தேவியாகிய ஸரஸ்வதீ தேவிக்கு வருஷம் ஒரு முறை ஆராதனையை எல்லா ஜாதியாரும் நடத்துகின்றார்கள். இதுவே இந்திய ஜநங்கள் எவ்விதம் கல்வியின் பெருமையை, மதிக்கிறார்களென்பதை விளக்கும். அதன் மாட்சிமை பணம், உலக உயர்வு முதலிய லாபங்களை உத்தேசித்ததன்று. அதுவே அதன் மாட்சிமையாகும், கீழ்க்கடையான எந்தலக்ஷியத்தையும் அது நாடியதன்று. தரித்திரனாயினும் கல்வியுடையானாயின் அவன் மாட்சிமையுடையானவன். இரத்நங்கள் அமையப்பெற்ற கிரீடத்தை தரிக்கும் மகுடாதிபதியும் கூட அவன் காலில் விழுவான். இத்தன்மையான உயர்நலம் அமைந்த கல்வியின் பெருமையை, இக்காலத்திய உலக நிர்வாகங்களினால், கெடுத்து அது சிறுமை பெறும்படி செய்யலன்றி.

4. ஸர்வகலாசாலையானது, குருக்கள், வித்தியார்த்திகள் அடங்கப்பெற்ற வித்வத் கோஷ்டியாம். உயர் நலமமைந்த லக்ஷியங்களையும், உயர் நலமுள்ள மநோபாவங்களையும் உண்டு பண்ணும்

சாலையாம். இந்த அபிப்பிராயத்தில் இத்தகைய கலாசாலை இத்தேச த்திற்குப் புதியதன்று. வேதகாலத்திற்குப் பிறகு நடைபெற்ற பரிஷத்துக்கள் என்ன, (பிருஹத் ஆரண்யக உபநிஷத்தில் பீரவாஹ நன் என்ற ராஜன் சுவேதகேது, ஆருணேயரை ஞான சாஸ்திரத்தில் பல கேள்விகள் கேட்டு அவைகளுக்கு அவர் விடைகொடுக்க இயலா மல் மயக்கியது, இத்தன்மையான பரிஷத்துக்களின் கண்தான்) ஹியூன்த்ஸியாங்கு என்ற சீனதேசத்தின் யாத்திரைக்காரர் பிரஸ் தாபித்திருக்கின்ற நாலந்த முதலிய பௌத்த சங்கிரமங்கள் என்ன, தமிழ் நாட்டில் அநேக நூற்றாண்டுகளாகப் பெயர்போன சங்கங்கள் என்ன,(திருக்குறளைக் கடைச்சங்கம் போற்றி ஸ்துதிகள் செய்தது,) இத் தேசத்தில் இக்காலத்தில் பலவிடங்களிலிருக்கிற மடாலயங் கள் என்ன, இவைகளெல்லாம், ஞாநிகள் அறிஞர்கள் கூடி சாஸ் திரவிஷயங்களிலும் ஸமய விஷயங்களிலும் பிரஸங்கிக்கவும், ஆரா ய்ச்சி செய்யவும், கல்விப்பயிற்சியை விருத்தி செய்யவும் ஏற்பட்டு ள்ள ஸர்வகலாசாலைகள் என்றே மதிக்கலாம்.

5. ஸமயம் என்பது கண்ணையாகவும் கல்வி விளக்காகவும், இத்தேசத்திலும் ஐரோப்பாவிலும் இருந்தன என்பதை நாம் அறி வோம். புலோஞ, பாரிஸ் முதலியவிடங்களில் ஸர்வகலாசாலைகள் உண்டாகுமுன்னா,கிறிஸ்துத்துறவிகளும்அவர்களுடைய மடாலயங் களில் முதல் முதல் வித்யார்த்திகளுக்காகப் பாடசாலைகளை வைத்து நடத்திவந்தார்கள். அவ்விதமே இந்த தேசத்திலும் முதல் வர்ணத் தாரும், துறவிகளும், தத்வஆராய்ச்சியிலும்,ஞாநஅப்பியாஸ முறை யிலும்,காடுகளிலும், மலைக்குகைகளிலும்,பன்முறைகூடிவந்தார்கள். இவ்விதமாய்த் தாங்கள் கற்கவும் பிறருக்குக் கற்பிக்கவும் சேர்ந்தது. மேனாட்டில் கிறிஸ்துவ மடாலயங்களை அந்நாட்டு அரசர்கள் அநேக நூற்றாண்டுகளாக அநாதரவு பண்ணினார்கள். இந்த தேசத்திலோ அப்படியன்று; அரசர்கள் அடிக்கடி வித்வத் ஸபைகளை ஏற்படுத்தி யும்,அவைகளுக்குப் பலநாடுநகரங்களிலுள்ள வித்வான்களையும் ஞாநி களையும் கவிஞர்களையும் வரவழைத்தும், அறிவுபற்றிய ஸம்பாஷ ணைகளையும் நடப்பித்தும், அவர்களுக்குப் பலவித ஸம்பாவனைகள் கொடுத்தல் மூலமாய் அவர்களை ஆதரவு செய்தும் வந்தார்கள் அதன்மூலமாய்ப்பெருமைபெற்றார்கள். கௌரவப்பாராட்டினார்கள்.

ஸந்நியாஸம்பெற்ற பிராஹ்மணர்களும், ராஜாங்கத்தைத்துறந்து சத்காலம் கழிக்க விரும்பிய க்ஷத்திரியர்களும், தங்களுடையசாஸ்திரப் பயிற்சியாலும், ஆராய்ச்சியாலும், உயர்நலமுள்ள தபசினாலும், ஒழுக்கத்தினாலும், அநேக சிஷர்கள் சூழ விளங்கினார்கள். சில சமயங்களில், புண்ணிய தீர்த்தங்களிலும், க்ஷேத்திரங்களிலும், மஹா பிரக்யாதி பெற்ற ஞாநிகள் குரவர்கள் வஸிப்பார்கள்; தேசத்தின் பலவிடங்களிலுள்ள வித்யார்த்திகள் இவர்களிடம் பாடம் கேட்கவும், கல்விகற்கவும், ஞாந முறைகளில் பழகவும், போய்க்கூடுவார்கள்; அந்த ஞாநிகளுக்கும் குரவர்களுக்கும், சுசுரூஷைகள் செய்துகொண்டு அவர்களுடன் வித்தியாப்பியாஸம் செய்து வந்தார்கள். அத்தன்மையான புண்ணிய க்ஷேத்திரங்களில், வாரணாஸீ என்ற காசிநகர் முதன்மைபெற்றது. கலைகளும் கல்வியும் உறைவிடமாகக் கொண்ட ஆதேன்ஸ் என்ற நகரத்தை விடவும், உலகத்திற்கு பிரதாந நகரமாயும், கிறிஸ்து ஸமயத்தின் உயர்வுபெற்ற மடாலயம் உள்ளதாயும் விளங்கின ரோமாபுரியை விடவும், விஞ்ஞாநப் பயிற்சிக்கு இருப்பிடமாகிய பாரிஸ் நகரத்தை விடவும், வர்த்தகத் துறைகளில் முதன்மைபெற்ற லண்டன்மாநகரத்தைவிடவும், வெகுகாலமாய் உயர்வற உயர்நலம் பெற்றது இக் காசி க்ஷேத்திரமே. இந்தியர்களுக்குள் அநேக யுகங்களாகக் காசி நகரைப்பற்றி ஒப்புயர்வற்ற ஒரு விதமான பக்தியும், சிரத்தையும் உண்டு. அது அந்நகரில் இருந்த கம்பீரமான ஞாநிகள் குரவர்கள், காரணமாக மாத்திரமல்ல, அதன் கண்ணுள்ள பலவாறான ஆலயங்கள்காரணமாக மாத்திரமல்ல. “மரணகாலத்தில், அப்புண்ணிய தேசத்தில், கடைசி சுவாஸம் விடுபவன் மோக்ஷம் பெறுவான்” என்ற நன்னம்பிக்கை ஹிந்துக்களுக்குள்ளிருக்கின்றமையால் அதுவே சுவர்க்கவாசல் என இந்தியர்கள் மதிக்கின்றார்கள். வேதத்தின் உபதேசமாகிய ஸத்யாந்நாஸ்திபரோதர்ம: என்ற ஒப்புயர்வற்ற தர்மத்தை ஹரிச்சந்திர மஹாராஜன் இந்த க்ஷேத்திரத்திலன்றோ தன் வாழ்வு மூலமாய் ஆசரித்துக் காட்டி இந்தியர்களின் மநத்தில் என்றும் மறவாதபடி பதிய வைத்தான்! ஸக்கிய குலத்திலகாரன கௌதமர் தம்முடைய ராஜ ஸம்பத்தைத் துறந்து அக்காலத்திய ஸகலவித்துவத்துவமும் நிறைந்ததும், அஸி, வரணை நதிகளும் கங்கையுடன் ஸங்கமம்

ஆகும் இடமுமான இந்நகரிலன்றோ தாம் நாடிப் பயின்ற மோக்ஷமார்க்கத்தை வெளியிட்டார்! முற்காலத்திலும் இக்காலத்திலும் ஞான முறையில் ஒப்புயர்வற்றவரான ஸ்ரீ சங்கராசாரியர் தாம் கொண்ட ஞான சிந்தனைகளை அறிஞர்களின் சம்மதம் பெறவேண்டி இந்த திவ்விய தேசத்திலன்றோ பிரசித்தம் செய்தார்! கல்வியும் ஞானமும் மதுரை, நவத்வீபம் முதலான மற்ற நகரங்களிலும் அநேக நூற்றாண்டுகளாகப் பிரகாசித்தன. வித்வத் ஸம்பத்தைப் பெறுதலை ஒரு யக்ஞமாகக்கொண்ட பூர்வீகர்கள் கொடுத்திருக்கிற இத்தகைய கம்பீரமான ஞான சம்பத்தை அடைந்திருக்கிறவர்களான நீவிர் கல்விப்பயிற்சியிலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும் வித்வத் ஸம்பத்தின் லாபம் வித்வத்ஸம்பத்து என்பதைத்தவிர வேறு தூண்டுதலை வேண்டீர் என மதிக்கின்றேன்.

6. ஆனால் பொதுவாக, கீழ் நாட்டின் கல்வியும், ஞானமும் பிழைக்கும் வழிக்கு அநுகூலமில்லாத வெறுமையானவைஎன்றும், கீழ்நாட்டின் மதஸம்பிரதாயம் நலம் தங்கிய உலக கைங்கரியத்தில் ஈடுபடவில்லை என்றும் ஒருபெரிய அபவாதம்நெடுநாளாகநடைபெறுகிறதுஎன்பதைநான் அறிவேன். இங்கிலாண்டில் மாத்யூஆர்நால்டு என்ற அறிஞர் இதைப்பற்றி அடியில் வருமாறு பிரஸ்தாபித்துள்ளார்:—"அநேக சேனைகள் தன்னைப் படையெடுத்து ஸ்வாதீநம் பெற்றும், இந்தியா அதைக் கண்ணுற்றும் கவனியாமல் ஸமாதியில் திரும்பவும் புகுந்திருக்கின்றது." புதுக்கோட்டையின்கண்ணிருந்த ஞானியும் கவியுமாகிய சாநசிவப் பிரஹ்மேந்திரர் ப்ரஹ்ம நிஷ்டையின் ஆநந்தாநுபவங்களைப் பற்றி விஸ்தாரமாக அடியில் வருமாறு எழுதியிருக்கின்றார்.

"சூரிய கிரணங்கள் குளுமையாக மாறில் என்? சந்திர கிரணங்கள் வெந்தீபடக் காயில் என்? அக்கி தலைகீழாய்எரியில்என்? ஆயினும்பூர்ணம்பெற்றஞானிகள் இவைகளை ஆச்சரியமாகநினையார்."

"கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: கர்மம் செய்தல் கர்மம் செய்யாமையினும் மேலானது." என்பது கீதாசாஸ்திரத்தின் தீர்க்கமான உபதேசம். உலகம் முழுமையும் நீ அடைந்தாலும் ஆத்மாவை இழத்தல் கூடாது என்பதும் உண்மையான உபதேசந்தான்.

ஆனாலும் ஞாநிகளுடைய லக்ஷியமான உயர்நல மமைந்த கம்பீர மான உந்நத பதவியைப் பெரும்பான்மையார் நோக்கி அடைதல் முடியாதது. அவர்களுக்கு உலகத்தின் சுகவாழ்வும், ஒப்புரவு அமைந்த பேரறிவாளனு யிருத்தலும், உலக கௌரவம் பெறுத லும், இவை போன்றவைகளான லௌகிக அநுபவங்கள் முக்கிய மானவை.

7. இந்தியாதேசத்தில் ஸர்வகலாசாலைகள் ஏற்பட்டு 50 வரு ஷங்களுக்கு மேல் ஆயின. கல்விப் பயிற்சியைப் பலவாறாக இத் தேசத்தில் விருத்தி செய்யவேண்டுமென்பதே அவைகளின் முக் கிய நோக்கம். அந்நோக்கம் ஒருவாறு நிறைவேறி யிருக்கின்றது. ஆனால் இன்னும் செய்யவேண்டியவேலை அதிகமாகவே இருக்கி ன்றது. * * * * * *

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ள ஸர்வகலாசாலைகளுக்கு ஜநங்கள் ஏராளமான திரவியத்தைக் கொடுத்திருக்கிறார்கள், கொடு த்துக்கொண்டும் வருகிறார்கள். அதனால் கல்விப்பயிற்சி மென்மே லும் அந்நாடுகளில் விருத்தியாகிக்கொண்டு வருகிறது. நம் தேச த்தில் அவ்விதம் இன்னும் ஏற்படவில்லை. வழக்கமாய் நம் தேசத் தில் தர்மவழியில் செலவழிக்கப்படுகின்ற திரவியங்களை நம்முடைய ஸர்வ கலாசாலையின் பிரயோஜநத்திற்காகத் திருப்புவோமாகில் உயர் நலமாயிருக்கும். காலக்கிரமத்தில் அது ஏற்படுமென நம்பு கிறேன். உங்களில் சிலரேனும் உத்தியோக முறையிலும் வியா பார முறையிலும் ஏராளமாக உலக சம்பத்தை அடைவீர்கள். அப்போது, இனிவருபவர்களானஉங்கள் சந்ததியாரின் கல்வி யபிவி ருத்தியின் பொருட்டு,ஸர்வகலாசாலைக்கும் திரவிய சகாயம்வேண்டு மென்ற எண்ணம் உங்கள் மநத்திலுதயமாகி உதவி புரிவீர்களெ ன்று நான்நம்புகிறேன். யம என்பவரின் ஸ்மிருதியிலும்பிருஹஸ்பதி என்பவரின் ஸ்மிருதியிலும், கல்வி யபிவிருத்தியின்பொருட்டு செய்யும் பூர்த்தங்களே சிரேயஸ்காரமானவைகளென உபதேசம் உள்ளது. அரபியா தேசத்து தீர்க்க தர்சியாகிய 'மஹமத்நபியும் "வித்வான்களை ஆதரிக்கிறவர்கள் என்னைமரியாதைபண்ணுகிறார்கள்" எனகிறார். இங்கிலாந்து தேசத்திலுள்ள ஸர்வ கலாசாலைகளுக்கு ஹாலி, ரோமான்ஸ், என்ற புத்திமான்களின் ஞாபகார்த்தமாக

உபந்நியாசகர் கட்டளைகளைச் சில தநவான்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவ்விதமே நமது தேசத்திலும் ஞாந சாஸ்திரவிஷயங்களைப்பற்றி உபந்நியாஸம் செய்யத் தூண்டுதலாக உபந்நியாஸஞ்செய்பவர்களுக்குச் சம்பாவனை செய்கிறதற்காக, உபந்நியாசகர் கட்டளைகளை ஸ்தாபிக்க தநவான்கள் முன்வருவார்கள் என நான் நம்புகிறேன். Sir, S. சுப்பிரமணிய ஐயரவர்கள் நம் தேசத்திற்குச் செய்திருக்கிற உயர்நல மமைந்த பல கைங்கர்யங்களுக்காக தர்ம சாஸ்திரவல்லுனர்(Doctor of Laws)என்றபட்டம்பெற்றுக் கீர்த்திமானாக விருக்கின்றார். அத்தகையாருடைய பெயரால், வருஷம் ஒன்றுக்கு 250 ரூபாய், உபந்யாசகருக்குச் சம்பாவனைக்காக வருவாய் உண்டாக்கப் போதுமான மூலதிரவியத்தை, நமது ஸர்வகலாசாலை அதிகாரியுடைய சுவாதீநத்தில் இன்று ஒப்புவிக்கிறேன். அவர்கள் அங்கீகரிப்பார்களென்று நான் நம்புகிறேன்.

8. நமது தேசத்தில் இப்போது நடைபெறுகின்ற ஸர்வகலாசாலைகளால் நமது தேசத்தாருக் குண்டாகியிருக்கும் பலன்களைப் பற்றி, நம் தேசத்தில் கொஞ்சம் அதிருப்தி உண்டாகியிருக்கிறது அதுகாரணமாக நூதநகலாசாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணம் ஜநித்திருக்கிறது. அதைப்பற்றி அபிப்பிராயபேதங்களுள்ளன. ஒரு சாரார், இப்போது நடைபெறும்ஸர்வகலாசாலைகளுக்கு அதனால் கெடுதல் நேரிடுமென்பார். மற்றொருசாரார் ஜநங்களின் அறிவு அபிவிருத்தியாகிற தென்றால், விஷய சுகத்தை நாடுகின்ற இக்காலத்திய நாகரிகமே உயர் நலமுள்ளதென்றும், அதன் சார்பாகவே கல்விப்பயிற்சியும் நடைபெற வேண்டுமென்றும் மதிக்கின்றார்கள். அதனால் புதிதாய் ஏற்படுத்தப்போகும் கலாசாலைகள் நமது தேசத்திற்கு உதவாவென்று ஆக்ஷேபிக்கின்றார்கள். மதவாதிகள் முன்காலத்தில் போல வில்லாமல் பொதுவான கல்விப் பயிற்சியும் அதனால் அகன்ற திருஷ்டிபெற்றவராய்ப் பிறமதங்களிலும் உயர்வான விஷயங்கள் இருக்கின்றனவென்று ஒப்புவார். ஆனால் ஞாநமுறையே வேண்டாமென்றும், விஷயசுக நுகர்ச்சியே நாகரிகத்தின்உயர்லக்ஷியமென நினைக்கும் சிலர், புதிதான ஸர்வகலாசாலைகளை ஸ்தாபித்தால் மௌட்டியம் உண்டாகுமென்று கூறுவார். இத்தன்மையானவர்களுக்கு ஹிந்துமதம் மஹம்மதியம் எல்லாமதங்களும் வர்ஜிதமான

வைகளேயாம். அவர்களோடு நமக்குப் போராட்டம் வேண்டாம். அவர்கள் சிந்தனையின் உல்லாச கதியில் சுகாநுபவம் பெறும்படி நம் மநத்தினின்று ·முற்றும் அவர்களை அகற்றுவோம். நம் தேசத்தில் நாம் போராடவேண்டிய அறிவின்மையானது பெருகியதாக விருக்கின்றது வித்வஸம்ரக்ஷணைக்கு அநுகூலமான பரம்பராஸம்பிரதாயம் இன்னும் இருக்கின்றது. கல்வியின் துறைகள் நாநாவிதமாயிருக்கின்றன. அதனால் புதிதாய் ஏற்படுத்தப்படும் ஸர்வகலாசாலைகள் நமக்கு அங்கீகாரமே. முன் நிருவப்பெற்று நடைபெறும் ஸர்வகலாசாலைகளுக்கு இவைகள் உதவியாகவிருக்குமே தவிர வேறில்லை. கிரேட்பிரிட்டனில் கல்வியறிவு விசாலம் பெறும்படியாகப் பன்னிரண்டு ஸர்வகலாசாலைகள் நடைபெறுகின்றன. நம் தேசத்தில் ஐந்து ஸர்வகலாசாலைகள் தானிருக்கின்றன; இவைகளுடன், சரியான நிபந்தனைகளுக்குட்பட்டு ஹிந்து, மஹமதிய ஸர்வகலாசாலைகள் ஏற்படுத்தப்படும் பக்ஷத்தில், அவைகள் நமது தேசத்திற்கு அதிகமென்றுவது, பலபடித்தரங்களுள்ள இந்தியர்களுக்கு அவைகள் பொருத்தமாக மாட்டாவென்றுவது, அநாவசியமென்றுவது, வைஷம்யத்தையுண்டுபண்ணு மென்றுவது, நினைக்க நியாயமில்லை. பூர்வீகசரித்திர ஆரர்ய்ச்சியும், கல்வெட்டுகள்முதலியவையின் ஆராய்ச்சியும், கிருஷித்தொழில் முதலியவையின் ஆராய்ச்சியும், பரீக்ஷையும், எவ்வளவோ நம்தேசத்தில்செய்யவேண்டியவை இருக்கின்றன. இத்துறைகளில், இப்போது தான் ஏர் நாட்ட ஆரம்பமாகி இருக்கிறது. நூதந கலாசாலைகளிற் பயின்று தேரிய வித்தியார்த்திகள் இத்தகைய காரியங்கள் செய்யக்கூடுமன்றோ? ஒரு மத ஸம்பிரதாயத்துடனும் சார்புவேண்டாமென்ற நோக்கத்தைத் தலைமேற்கொண்டு பிரகிருதத்தில் நடைபெறுகின்ற கவர்ன்மெண்டு ஸர்வகலாசாலைகளிற் கற்பிக்கும் துறைகளினின்று மதசம்பந்தமான விஷயங்கள் முற்றும் விலக்கப்பெற்றிருக்கின்றன. நூதந சர்வகலாசாலைகளில் மதசம்பிரதாயங்கள், நீதி முறைகள், தத்துவ தர்சநங்கள், இவைகளின் ஆராய்ச்சியில் அதிக கவனம் செலுத்தும்படியானசௌகர்யங்கள் ஏற்படுமன்றோ?நம்மவர்களுக்குஇத்தகைய படிப்பும் பயிற்சியும் மிகருசியானவை. இச்சர்வ கலாசாலைகளில் யோக்கியதாபட்டம் பெறுமுன் அகன்ற மநத்தினராய் ஆவதற்

கநுகூலமாய் வித்தியார்த்திகள் 6 மாச காலம் இந்தியாவின் கல்விச் சங்கங்கள்உள்ள உயர் தர நகரங்களில் தேசசஞ்சாரஞ் செய்யவேண் டும். இதுபோன்ற சில நிபந்தனைகள் நூதந கலாசாலைகளின் சட்ட திட்டங்களில் அமைப்பிக்கப்படுமாகில், இக்கலாசாலைகள் மதத் துவேஷத்தை உண்டு பண்ணும் என்ற பயம் நீங்கும்.

9. ஸர்வகலாசாலைகள் படிப்புக்கு மாத்திரம் ஏற்பட்ட வை அல்ல; புதிய புதிய விஷயங்களைக் கண்டு பிடிக்கவும் புதிய புதிய ஆராய்ச்சிகள் செய்யவும், அநுகூலமாக இருத்தல் வேண் டும். இக்கலாசாலைகளினின்று தேர்ச்சி அடைந்த வித்யார்த்தி வெளியேறிப்போகுங்கால், உலகத்தின் அறிவு என்ற பொதுக்களஞ் சியத்திற்கு யாதேனும் ஒரு விஷயத்தின் ஆராய்ச்சியில் தன்னு டைய முயற்சி ஏற்படவேண்டு மென்று தீர்மானிக்க வேண்டும். பிறர்நலம் பெறவன்றோ, புத்தபகவான் பூர்ணம்பெற முயன்று பூர்ணம்பெற்றது. ஞாநவிருத்தியே உயர்நலமுள்ளது. அதைநோ க்க உலகத்தின் எவ்வித ஸம்பத்தும் நிகரில்லை. கற்க வேண்டிய வைகளும் அறிய வேண்டிய விஷயங்களும் இன்னும் ஏராளமா யுள்ளன. அவைகளில் முயற்சி ஏற்படுமாகில், மிகப்பலன் உண்டு. அறிஞர் கோஷ்டியில், இவன், அவன் என்ற வேற்றுமை இல்லை. உலகம் ஸ்நேகம் பெறவும், ஒற்றுமை அடையவும், கற்றோர்க ளின் சங்கம் பெருகுதல் நலம். ஹேக் என்ற பட்டணத்தின், உல கில் ராஜ்ஜியங்களுக்குள் சமாதாநம் உண்டுபண்ண முயலும் சங்கத்தையும், (Hague Conference), உலகிலுள்ள பலஜாதியா ருக்குள் சமாதாநத்தை ஏற்படுத்த முயலும் சங்கத்தையும்விட (Race Congress ), உயர்நலமுள்ள ஸர்வகலாசாலை ஜந சமூகத்தில் அதிக ஒருமை உணர்வையும், ஜநஐக்கியத்தையும் உண்டுபண்ணும் இயல்பின.

10. ஞாநத்துறைகளில் நம்தேசத்தில் மலடு என்பது (Intellectual barrenness) முன்காலத்தில் இருந்திருப்பதில்லை. ஆனால், வாடின புஷ்பத்தைப்பற்றிச் சிந்தித்து ஒருவரும் மகிழார். பூர்விகர்கள் கல்வித்திறமையையும், அவர்கள் தந்திருக்கின்ற ஞாந சாஸ்திரங்களையும் பற்றி நினைந்து அவைகளின் புகழைக் கொண்

டாடுதல் மாத்திரம் போதாது. கவித்திறமையில் வால்மீகி, வியாஸர், காளிதாஸர், துளஸிதாஸர், கம்பர் இவர்கள் போன்ற உயர்கவிகள் நம்தேசத்தில் இருந்திருக்கிறார்கள்: ஞானதத்துவ ஆராய்ச்சி முறையில், கபிலர், கநாதர், சங்கரர், ராமாநுஜர் முதலியோர் இருந்துள்ளார். லௌகிக தர்சநங்களில், பாணினி, பதஞ்ஜலி சரகர், சுசுருதர், ஆரியபட்டர், பாஸ்கரர், முதலிய அறிஞர்கள் இருந்திருக்கின்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவானுடையவும் பகவான் கௌதமபுத்தருடையவும் பாதங்கள் பட்டுப் புநிதமாக்கப் பெற்ற தேசம் இது. எத்துணையோ மஹான்களும், ஞாநிகளும், புண்ணியர்களும் இருந்த தேசம் இது. இப்பூமியில் எந்தஸ்தலத்துடன் ஒப்பிடினும், உயர்நலம் மேலிட்டதாகவே உள்ளது இத்தேசம். இத்தகையார்கள் இனியும் இத்தேசத்தில் அவதரிப்பார்கள் அன்றோ? இவர்களின் வம்சம் அற்றுப் போகவில்லை. ஞாநிகளையும் அறிஞர்களையும், தீரர்களையும் உண்டுபண்ணிய வளமுள்ள கர்ப்பமாக நம்தேசம் இருந்தது. இனியும் இருப்பதாகும். ஞாநிகளின் திரளான பெரியநதியின் வெள்ளம் நம்தேசத்தில் முன் ஓடிற்று; இப்போது அது ஒரு சிறு ஓடையாக இருக்கின்றது! இனி அது திரும்பவும் பெரு வெள்ளமுள்ள நதித் திரளாக ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

11. ஞாநமுறையில் நூதநமாய்க் கண்டுபிடித்தலில், இந்த தேசத்தில் அநேகதடைகளும் சங்கடங்களும் இப்போது உள்ளன. இக்காலத்தில் உலகத்தின் உயர்நலம் அமைந்த உண்மைகள் ஞாநவிஷயங்கள் முதலியன ஆங்கில பாஷையில் பெருகி இருக்கின்றன. அப்பாஷையில் பயிற்சிஇருந்தால் அல்லாமல், உலகில் நடைபெறும் உயர்ந்த விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளுதல் இயலாததாக இருக்கிறது. அதற்காக, எவ்வித ஸம்ஸ்காரத்தையும் எளிதாய்ப் பெறக்கூடிய வாலிபத்தில் நம்மவர்கள், கடிநமானதும் இலக்கண விஷயத்தில் ஒழுங்கில்லாததும், ஆனால் எவ்வெண்ணங்களையும் இலகுவாய் வெளியிட அநுகூலமானதுமான ஆங்கில பாஷையைக் கற்கவேண்டியதாக இருக்கின்றது. இத்தகைய கல்வியின் பயிற்சிக்கு உதவும்படி விஸ்தாரமான புத்தக சாலைகளும்,

ரஸாயந முதலிய சாஸ்திரங்களின் ஆராய்ச்சிக்குரிய தொழிற்சாலைகளும், கற்க சாவகாசமும், நம்தேசத்தில் இனி விஸ்தாரமாக ஏற்படவேண்டும். நம் தேசத்திலுள்ள பிரதான நகரங்களில் உள்ள கலாசாலைகளில் நூதந விஷயங்களைக் கண்டு பிடித்தலுக்கு அநுகூலமான சௌகர்யங்களும் உதவிகளும் ஏற்படவில்லை. பொது வகையாகச் சொல்லுமிடத்து, நம்மவர்கள் சரித்திர ஆராய்ச்சித் துறையில் அவ்வளவு உத்ஸாக முடையவர்களாக இல்லை. பூர்வசரித்திரத்தைப்பற்றி நமக்குப் போதுப்பட ஒரு சிரத்தை யிருக்கிறது. பூர்விக விஷயத்தைப்பற்றிய ஆராய்ச்சி இல்லை. பூர்விகர்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை, அதனால் ஒருவித மூட பக்தியும், இனி நூதந விஷயங்களைக் கண்டு பிடித்தலில் ஒரு தடையும் ஏற்பட்டிருக்கின்றன. இத்தன்மையான சுபாவம் நம்மவர்களிட மிருக்கும் வரையில், நூதந விஷயங்களைக் கண்டுபிடிக்கும் துறையில் அதிகமாக எதிர்பார்த்தல்முடியாதுதான். கீழ்நாட்டாரான நம் தேசத்தாரால் உலகத்திற்கு உண்டாயிருக்கிற சிரேயஸ்கரமான ஞாநஸம்பத்தின் உயர்வைப்பற்றி உலகத்தார் இன்னும் சரியாய் மதிக்கின்றார் இல்லை. ஸ்ரீமாந் மாக்டோனல்டு என்ற மேல்நாட்டு அறிஞர் சொல்லுகிறபடி "ஸம்ஸ்கிருத பாஷையாலும் அதன் இலக்கியங்களாலும் ஐரோப்பியர் அறிந்துகொண்ட விஷயம் உயர்நலமுடையது, பெரிதானது. இன்னும் பெருகும் தன்மையுடையது. இவ்விஷயத்தில், அவர்கள் நனி நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்."

12. நம் தேசத்தில் அநேக நல்ல விஷயங்கள் காலதாமசத்தாலாவது இனி சம்பவிக்குமெனத் தோன்றுகிறது. பல விடங்களில் அறிஞர்கள் சிலர் சிலர் கூடிச் சபைகளை உண்டுபண்ணி நற்காரியங்கள் செய்துகொண்டு வருகிறார்கள். ஆங்கில சபை(English association) என்ன, தெலுங்கு பாஷா அபிவிருத்தி (Telugu academy) சபை என்ன, மதுரைத் தமிழ்ச் சங்கம் என்ன, கணித சாஸ்திர ஆராய்ச்சி சபை(Mathematical association)என்ன, தென்னிந்தியா சபை (South Indian association) என்ன, இவைபோன்றவை ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பெயர்போன அறிஞர் குழாங்களை ஞாபகப்படுத்துகின்றன. ஸ்ரீமாந் தாதா என்ற போதிவாளரின் நல

முள்ள முயற்சியால் பங்களூரில் பிரகிருதி தத்துவ சாஸ்திரங்களின் ஆராய்ச்சி ஆலயம் ஒன்று நிருவப்பெற்று நடைபெற ஆரம்பமாகி இருக்கிறது. பிரகிருத காலத்தின் தன்மையைச் சிந்திக்குமளவில், ஒவ்வொருவனும் தன்னால் இயன்றவரை நற்காரியங்களில்நன்முயற்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறான் என்ற தர்மம் மனிதர்களின் மநத்தில்நடைபெறுகிறதைக் காண்கிறோம். ஒரு விஷயத்தில் அதிககாலம் செலவழிக்க இயலவில்லை என நினைக்கவேண்டாம். ஆனால்காலம்கழித்தலைவிவஸ்தைப்படுத்திக்கொள்ளுமின். அதனால் அதிக காரியம் செய்தல் கூடும். நன்றாய்க் கல்விகற்று அறிவுடன் காலத்தை வகுத்து, கூட்டுறவானபெருங்காரியத்தைச்(Organised work)செய்மின். மஹா பாரதத்தில்இல்லாதது உலகத்திலில்லை என்றமஹிமை பெற்றஅக்கிரந்தத்தில் அடியில் வருமாறு உபதேசம் உள்ளது. "வேதமாயிருப்பினும் அறிவுக்குப்பொருத்தமிலதாயின் அதுவேதமன்று என்று எண்ணுக". உங்களில் சிலர், பிரகிருதி தத்துவ சாஸ்திரங்களின் ஆராய்ச்சிமூலமாய்ச் சேமித்திருக்கிற உலக சம்பத்துக்களைப்பெற முயல்வீர்கள். சக்கரவர்த்தி அசோக வர்த்தனன் உபதேசித்து அநுஷ்டித்துக் காட்டியவாறு நீவிர்நடப்பீர்களாக. "எதைச் சரியென்று அறிகிறேனோ அதை அநுஷ்டிக்கக் கடவேன்". மஹாவக்க என்ற பௌத்த ஞான சாஸ்திரம் உபதேசித்துள்ள வார்த்தையை உங்களுக்குச்சொல்லுகிறேன். "அகன்ற அறிவுடனேயும் விரிந்த ஹிருதயத்துடனேயும், உயர்நலம் அமைந்த சீலத்துடனேயும், உலக கைங்கரியம்செய்யத்தேர்ந்து பழகிய தகைமையுடனேயும், என் சகோதரர்களே! உலக வாழ்வில் பிரவேசியுங்கள். பலர் க்ஷேமத்தின் பொருட்டும், பிறர் நலம்பெறும் பொருட்டும், உலகத்தின்கண்ணுள்ள துக்கத்தைக் கண்டு இளகி இரக்கமுள்ளவராய் நடை பெறுமின். உலகம்நலம்பெற வாழ்மின்". நீவிர் எங்கேபோயினும், எத்தொழில்புரியினும், திவ்விய ஹிந்துமத சாஸ்திரத்தில் மனித கர்ம பூமிகளான திரிலோகங்களிலும் உதவுகின்றதும் மும்முறை உச்சரிக்கப்பெறுகிறதுமான உயர்நலம் அமைந்த சாந்தியை நம்ஹிருதயத்தில் பதித்துக்கொள்மின்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ப. நா.

## காயத்ரீ இராமாயணம்.

(312-ம் பக்கத் தொடர்ச்சி.)

குறிப்பு:—ஹாதஸ்ய வஹத்ருஸ்ய=கர்மபாரத்தை வகித்த புத்திரனுக்கு. ஶ்ரேஷ்ட=(விளிவேற்றுமை) சிரேஷ்டனானவனே. ஸ=த என்று பொருள். "அவர்களுடைய ஸம்பந்தத்தினால் ஏற்பட்ட பாசம் உன்னைத் தடுக்காமல் இருக்கவேண்டும்." என்று பொருள்.

(10) கச்ச: (க)=கச்ச ஶீக்ரமிதோ வீர ஸுக்ரீவம் தம் மஹாபலம்।
வயஸ்யம் தம் குரு க்ஷிப்ரம் இதோ கத்வாத்ய ராகவ॥
ஆரண்யகாண்டம் LXXII 17.

10. (உன்னுடைய மநவலி குன்றாத இருக்கும்படியாக) ஹே! சீக்கிரகாமி! இப்பொழுதே இதை விட்டுச் சென்று அந்த மஹா பலவானாகிய பரமேசுவரனைச் சீக்கிரம் நீ சகாயமாகக் கொள். ரம்யமானவனே! இதை விட்டுச் சீக்கிரம் செல்.

குறிப்பு:—ஸுக்ரீவம் = அழகான கழுத்தை யுடையவன். ஸ்ரீகண்டன் என்பதற்குப்பிரதிநாமம். மஹேசுவரனென்று பொருள். ராகவ = சீக்கிரமாகச் செல்லுகிறவனே என்று பொருள்.

(11) தே = தேஶகாலௌ ப்ரதீக்ஷஸ்வ க்ஷமமாண: ப்ரியாப்ரியே।
ஸுகது:கஸஹ: காலே ஸுக்ரீவ வஶகோ பவ॥
கிஷ்கிந்தா காண்டம் XXII 20.

(11) நீ (வாநபிரஸ்தாச்ரமத்தில்) காலத்தையும் தேசத்தையும் அநுசரித்து நடக்கவேண்டும். பிரியம், அப்பிரியம் இரண்டையும் பொறுததுக்கொள்ளவேண்டும். நீ எப்பொழுதும் மஹேசுவரனுக்கு அதீநனாக இருக்கவேண்டும்.

(12) வ = வ்ருத்தாஸ்தாபஸஸித்தா: தபஸா வீதகல்மஷா:।
ப்ரஷ்டவ்யாஶ்சாபி ஸீதாயா: ப்ரவ்ருத்திம் விநயாந்விதை:॥
கிஷ்கிந்தா காண்டம் XLIII 34.

(12) (வாநப்பிரஸ்தாச்ரமத்தில் தபஸ்வினாலே குற்றமற்றவர்களாயிருக்கின்ற முனிவர்களையும் ஸித்தர்களையும் வணங்கவேண்டும். உன்னுடன் கூடவிருக்கிற உன் மனைவியினுடைய ப்ரவிர்த்திகளையும் மிகவும் விநயமாக விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும் (அதாவது அவளுடைய ப்ரவிர்த்தி குற்றமுள்ளதாயிருக்கும் பக்ஷத்தில் இவனுடைய ஆச்ரமத்திற்கே கேடு ஸம்பவிக்குமாகையால்).

(13) ஸ்ய (ஸ) = ஸ நிர்ஜித்ய புரீம் ஶ்ரேஷ்டாம் லங்காம் தாம் காமரூபிணீம்। விக்ரமேண மஹாதேஜா ஹநூமாந் கபிஸத்தம:॥

ஸுந்தரகாண்டம் IV 1.

(13) (மேற்கண்டபடி குருவின் உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு அந்த கிருஹஸ்தனானவன் வாநப்பிரஸ்தாச்ரமத்தில் பிரவேசிக்கின்றான்). அவன், காமத்தையே தன் ரூபமாக உடையதும் சிரேஷ்டமானதென்று இதுவரையில் அவன் அபிமானித்து வந்ததும் ஓயாத அவாவையுடையதுமான தேகத்தை, தன்னுடைய தவத்தின் மஹிமையால் ஜயித்தான்.

குறிப்பு:—புரீம் = சரீரத்தை (பிரமபுரமென்று சரீரத்துக்குப் பெயர்.) ஹநூமாந் = (ஹநு = ஜயிப்பதற்கு உதவும் ஆயுதம்) ஹநுவை உடையவர் ஹநு=என்னும் தாதுவுக்கு, கொல்லுதல், ஜயித்தல் என்று பொருள். கபிஸத்தம: = அக்நி அதாவது தவத்தின் பெருமையால் அக்நி போலாகி சரீர ஸம்பந்தத்தை ஜயிக்கும் திறமையுடையவன் என்று பொருள்.

(14) தீ (த) = தந்யா தேவா: ஸகந்தர்வா: ஸித்தாஶ்ச பரமர்ஷய:। மம பஶ்யந்தி யே நாதம் ராமம் ராஜீவலோசநம்॥

ஸுந்தர காண்டம் XXVI 41.

(14) (பரப்ரஹ்மத்தை அறிவதற்கு அவனுக்கு உண்டான தீவ்ரமான ஆசையைக் குறிக்கின்றது.)

என்னுடைய நாதனாகிய ஆநந்தமயமானவனும் பார்வையினால் ஸிருஷ்டியையும் கண்ணை மூடுவதினால் பிரபஞ்சலயத்தையும்

செய்கின்றவனுமான (பரமேசுவரனை பரபிரஹ்மத்தை) அறியும் தேவர்களும், கந்தர்வர்களும், ஸித்தர்களும், ரிஷிகளும் தன்யர்கள் (இவ்விதமாக அவனுடைய மகத்தில் அவாவானது பெருகி நிற்கின்றது.)

குறிப்பு:—𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 = சுகரூபமான. 𑌰𑌾𑌜𑍀𑌵𑌲𑍋𑌚𑌨𑌂 = தாமரை போன்ற கண்ணன். தாமரையானது மலர்வதினால் திநத்தினாரம்பத்தையும், மூடுவதினால் திநத்தின் முடிவையும் குறிக்கிறபடி.

(15) 𑌮 = 𑌮𑌂𑌗𑌲𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍀 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾 𑌤𑌦𑌾𑌸𑍀𑌨𑍍𑌮𑌹𑌾𑌕𑌪𑍇𑌃 ।
𑌉𑌪𑌤𑌸𑍍𑌥𑍇 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍀 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌨𑌂 ॥

சுந்தர காண்டம் LIII 27.

(15) தன் தவத்தின் மகிமையால் புத்தி தத்துவத்தை அசைத்து ஜயித்துவிட்ட அந்த கிருஹஸ்தனுக்கு மங்களம் அதாவது ஞானம் சித்திக்கும்படியாக அக்நியை ஆராதித்துக்கொண்டு அவனுடைய மனைவி (ஒற்றுமையாக) இருந்தாள்.

குறிப்பு:—𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃 = (மகத் என்றால் புத்தி தத்துவம், 𑌕𑌪𑌿𑌃 = அசைத்தவன்.) புத்திதத்துவத்தை ஜயித்தவன்.

16) 𑌹𑌿 = 𑌹𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑍃𑌦𑍁 𑌹𑍇𑌤𑍁𑌸𑌂𑌹𑌿𑌤𑌂
𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌕𑌾𑌲𑌾𑌯𑌤𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑌂 ।
𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌜𑍍𑌵𑌰𑌃
𑌪𑍍𑌰𑌸𑌂𑌗𑌵𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑍇𑌤𑌦𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

யுத்தகாண்டம் X 27.

(16) (அவன் மனைவியும் ஞாந மார்க்கத்தில் பற்றுள்ளவளாகி அதை அடைவதற்கு உபாயத்தையும் அதின் பலனையும் கேட்டுத்தெரிந்துகொள்ள முயன்றபொழுது) அவளுடைய வார்த்தையைக்கேட்டு ஞாநாவேசம் உள்ளவனாகி ஹிதமானதும் மேலான அர்த்தம் நிறைந்ததும் அவளுக்குப் புலப்படக்கூடிய மிருதுவான ஹேதுவையுடையதும் முக்காலத்திற்கும் உபயோகமுள்ளதுமான மறுமொழியை (உபதேசத்தை) அவளுடன் பிரசங்கித்துச்சொல்லுகிறான்.

குறிப்பு:—வ்யதீதகால=சென்ற காலம். ஆயதீ=வருங்காலம். ஸம்ப்ரதி=நிகழ்காலம். உபஸ்தித ஜ்வர:=(ஜ்வர: = passion, inspiration) அதை உடையவன்.

(17) ய: (ய) = யஶ்சாத்ர ராக்ஷஸாம் ஶ்ரேஷ்ட: ஸம்ப்ராப்தோயம் விபீஷண: । லங்கைஶ்வர்யம் த்ருவம் ஶ்ரீமானயம் ப்ராப்னோத்யகண்டகம் ॥

யுத்தகாண்டம் XLI 67.

(17) (அந்த மறுமொழியாவது) தர்ம ஸ்வரூபனுகி காமக்குரோதாதிகளுக்கு மேற்பட்டவனுய் பயமற்றவனுய் எல்லா ஸம்பத்தையுமுடையவனுய் குறைவில்லாத ஐசுவரியத்தை (காமத்திற்கு மேல்பட்ட ஐசுவரியத்தை) நிச்சயமாக அவன் அடைகிறுன்.

குறிப்பு:—ராக்ஷஸாம்ஶ்ரேஷ்ட:=காமக்குரோதாதிகளுக்கு மேற்பட்டவன். விபீஷண: = பயமற்றவன். லங்கைஶ்வர்யம் = (லங்கா லங்க்யதே = அளவற்றதை ஆசை கொள்ளல்) அதை ஜயித்தல் லங்கைஶ்வர்யம்.

(18) யோ = யோ வஜ்ரபாதாஶனிஸன்னிபாதான்

ந சுக்ஷுபே நாபி சசால ராஜா ।

ஸ ராமபாணாபிஹதோ ப்ருஶார்த:

சசால சாபம் ச முமோச வீர: ॥

யுத்தகாண்டம் LIX 139.

(18) (பின்னர் அந்த ஆசிரமியுடைய நிலையைப்பற்றிப் பேசுகிறது.) அவன் இடி மின்னலினுல் வருந்த வில்லை, பிரகாசரூபியான அவன் அவைகளினுல் சலநத்தை அடையவுமில்லை, கொஞ்சம் சிரமத்துடன் அசைத்துக்கொடுத்து அந்த வீரன் பஞ்சேந்திரிய முதலான எல்லா பந்தங்களையும் ஒழித்துவிட்டான் (பின்னர் சன்னியாசியாகின்றுன்).

குறிப்பு:—ய: = எவன். ராஜா = பிரகாச ஸ்வரூபி. ராம பாணாபிஹத: = ராம = ரமிப்பதுக்கு யோக்கியமான, பாண =

நாதம், (அந்தப்பொருளுடைய வாஙு என்னும் தாதுவிலிருந்து), ஸமீஹிதா: = சிட்சிக்கப்பட்ட, ஸஹஸ்ராக்ஷ: = ஸஹஸ்ர + அக்ஷ: = சொற்பமான சிரமம் உடையவன், ஆரம்ப = ஐந்து முதலாக.

(19) ய: (ய) = யஸ்ய விக்ரமமாஸாத்ய ராக்ஷஸா நிதநம் கதா:।
தம் மந்யே ராகவம் வீரம் நாராயணமநாமயம் ॥

யுத்தகாண்டம் LXXII 11

(19) (அவன் சிறப்பு) எவனுடைய திரத்தனத்தினல் காமக்குரோதாதிகள் நாசத்தை அடைந்தனவோ அந்த சிக்கிர காமியாகிய வீரன் குறைதலில்லாத நாராயணனே. (அவ்விருவருக்கும் பேதமில்லையென்றபடி)

(20) ந: (ந) = ந தே தத்ருசிரே ராமம் தஹந்தமரிவாஹிநீம்।
மோஹிதா: பரமாஸ்த்ரேண காந்தர்வேண மஹாத்மநா ॥

யுத்தகாண்டம் LXLIV 26.

(20) உலகத்தார், காமக்குரோதாதிகளை எரித்து ரம்மியமாய் விளங்கும் அவனை அறியவில்லை. ஏனென்றால் அவர்கள் மிகவும பலம் உள்ள மாயையின் அஸ்த்ரத்தினல் மோகத்தை அடைந்த அக்ஞாநிகள்.

(21) ப்ர = ப்ரணம்ய தேவதாப்யஸ்ச ப்ராஹ்மணேப்யஸ்ச மைதிலீ।
பத்தாஞ்ஜலிபுடா சேதமுவாசாக்நிஸமீபத: ॥

யுத்தகாண்டம் CXIXL 23.

(21) (அவன் மனைவிக்குப் பிராரப்தம் ஒழிகின்றது. அக்நியில் பிரவேசிக்கின்ருள்) தேவதைகளையும் பிராஹ்மணர்களையும் வணங்கிக் கைகூப்பி அக்கினிக்குச் சமீபத்திற் போய் அவன் மனைவி முந்திய சுலோகத்தின கருத்தைச் சொல்லுகிருள். அதாவது தன் நாயகனைத் துதிக்கின்ருள்.

குறிப்பு:-மைதிலீ = கூடியிருந்தவள், மனைவி. (மித எனனும் தாதுவுக்கு கூடுதல் சேருதல் என்று பொருள்).

(22) [illegible]
[illegible]

உத்தரகாண்டம் XVI 26

(22) (அவளுடைய சிறப்பு) அவள் அசைந்தால் மகாமேருவிலுள்ள எல்லா தேவகணங்களும் அசையும். பார்வதியுங்கூட அசைவாள். (அவள் அக்கினியிற் பிரவேசித்தவுடன்) பரமேசுவரனை அடைந்தாள், (கலந்தாள்).

(23) [illegible]
[illegible]

உத்தரகாண்டம் XXXIV 41.

(23) (அந்த சன்னியாஸியின் மன நிலையும் அவன் அநுபவமும்) நாராயணனாகவும் பரமேசுவரனாகவும் இருக்கிற பரம்பொருளே! ஸம்ஸாரம் புத்திரர்கள், புரம், ராச்சியம் போகம், உடை முதலிய எல்லாம் உனக்கும் எனக்கும் பொது (அதாவது பிரிக்கப்படாதது). இதின் தாத்பரியம் ஈசுவரனுக்குள்ள ஸகல போகங்களையும் "[illegible]" "[illegible]" "[illegible]" என்கிற சுருதி வசநங்களின்படிக்கும் "[illegible]" என்னும் ஸூத்திரப்படிக்கும் அவன் ஈசுவரனுக்கு ஸமாநமாக அநுபவிக்கிறான் என்றபடி.

(24) [illegible]
[illegible]

உத்தரகாண்டம் LXVI 1.

(24) (அந்த ஸன்னியாஸிக்குப் பிராரப்தம் ஒழியும் காலம்) எந்த தினத்தில், சத்துருவாகிய அவித்தையை ஜயித்துவிட்ட அந்த ஸன்னியாஸி எந்நாளும் புதிதாகவும் விகாரமற்றதாகவுமிருக்கிற நிலையை அடைந்தானோ, அந்த தினத்தில் இந்த புவநத்தில் இரண்டு இடைவெளிகள் உண்டாயின. அதாவது அவனும் அவனுக்கு மனைவியாயிருந்தவளும் பிறப்பற்றவர்களாய் விட்டபடியால் அவர்கள் இரு

வரும் இந்த உலகத்திற்குத் திரும்பிவருகிறதில்லை ("நசபுநராவர்த்ததே" என்னும்சுருதி வசனப்படிக்கும் "ந சாவர்த்ததிச புநா" என்னும் சூத்திரப்படிக்கும்.

குறிப்பு:—ராத்ரி=யோகிகள் விழித்திருக்கும் காலம். வனஸ்பதி = வனஸ்பதி = எப்பொழுதும் வாடாது பசுமையாயிருக்கிறது தாபமில்லாதிருக்கிறது, ஸாலா = இடம், நிலை, தாபமில்லாதிருக்கிற இடம். வீதா = புவகம் (கர்மத்தினல் கட்டுப்பட்ட.)

வீதா = என்னும் பதத்திற்கு ரிக்கு வேதம் IV-வது காண்டம் 57-வது பிரஸ்னம் 6-வது பஞ்சாதியில் பூமிக்கு அதிஷ்டாந தேவதை யென்னும் அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்க.

ஊரகம் = பிளப்பு, இடைவெளி.

ஆகவே மேலே விவரிக்கப்பட்டிருக்கிற 24 சுலோகங்களுக்குள் 1, 2, 3-வது சுலோகங்கள் பிரஹ்மசரிய ஆச்ரம தர்மத்தையும், 4 முதல் 12 வரை சுலோகங்கள் கிருஹஸ்தாச்ரம தர்மத்தையும், 13 முதல் 18 வரை உள்ள சுலோகங்கள் வானப்பிரஸ்தாச்ரம தர்மத்தையும், 19 முதல் 23 வரை உள்ள சுலோகங்கள் ஸந்நியாஸ ஆச்ரம தர்மத்தையும், 24-வது சுலோகம் மோக்ஷப்பிராப்தியையும் ஸங்கிரகமாகக் கூறி காயத்ரீ மந்திரத்தில் (தியோயோந:) பிரசோதயாத் என்னும் வசனப்படி மநுஷ்யனுடைய அறிவை ஏவி நடத்துகிற சுபாவம் மேற்படி மந்திரத்திற்குச் சொல்லியிருப்பதற்கு இணங்க காயத்ரீ இராமாயணமும் அவ்வாறே புகன்று மானிடர்களுடைய அறிவிற்கு பரம்பரையாக ஒவ்வொரு ஆச்ரம தர்மத்தையும் விளக்கிக் கூறி அந்த அறிவைக் குற்றமற்ற நல்லவழியில் ஏவி நடத்துகிறது. இராமாயணம் காயத்ரீ இராமாயணத்திலும், காயத்ரீ இராமாயணம் காயத்ரீயிலும், காயத்ரீயானது பிரணவத்திலும், பிரணவமானது பராசக்தியினிடத்திலும், பராசக்தியானது பரபிரஹ்மத்தினிடத்திலும் ஒடுங்கும் (லயமாகும்) என்று அறிக.

ஓம் தத் ஸத்.

P. S. S.

## உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு.

---

இதன் பொருள், அதிகமாக சாப்பிடாமலிருத்தல், பெண்களுக்கு நலந்தரும் என்பதாம். அழகு, நலம் என்றால், சரீர வனப்பு மாத்திரம் கருதப்பட்டதாகத் தோன்றவில்லை. நமது தேசத்தில் ஸ்திரீகள் செய்யும் "தபசு" எல்லாம் புதல்வரைப் பெறுதலின் மேல்நிற்கின்றது. ருது சாந்திமுகூர்த்தம் ஆனபிற்பாடு 2, 3, வருஷத்திற்குள் குழந்தை பிறக்காவிட்டால், இராமேசுவரம் முதலிய ஸ்தல யாத்திரைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. சர்ப்ப சாந்தி, சதுர்த்தி விரதம் முதலியவைகள் நடத்தப் படுகின்றன. ஞானசிரோன்மணியாகிய ஔவையார், நமது தேசத்திலுள்ள ஸ்திரீகளுக்கு உள்ள அவாவை அறிந்து அவர் அதை நிறைவேற்றும் பொருட்டு அதற்குற்றதான இந்த உபதேசத்தைச் செய்துள்ளார். அளவுக்கு மிஞ்சி உணவை உட்கொண்டால் ஸ்தூலம் பெருத்து, அதக உரத்தால் அதப்பை தட்டிய நிலத்தைப்போல், பிரஜோற்பத்திற்கு இடமில்லாமல் போகின்றது. அல்லது அதிக உண்டியால் ஸ்திரீப் பிரஜைகளே உண்டாகின்றன. மேலும் உணவுக்குத்தக்கபடி, சரீர சம்பந்தமான வேலை இல்லாதிருக்கும் பக்ஷத்தில், உணவால் ஏற்படும் கொழுப்பு (Fat) சரீரத்திலுள்ள இடுவல்களில் போய்த்தங்கி சரீரத்திலுள்ள பல அவயவங்கள் சரிவரத்தொழிற்படச் செய்யத்டையாக யேற்படுகின்றது. இக்காலத்தில் சாதாரண அந்தஸ்திலிருப்பவர்களின் வீட்டு ஸ்திரீக்குக்கூடச் சரீர உழைப்பு முன் போலில்லை. கிராமவாசிகளாயிருப்பவர்களுக்கு சரீர சம்பந்தமான வேலை அதிகமாயுண்டு. நகரவாசிகளுக்கு அவ்வளவு வேலை கிடையாது. இதனால் நகரங்களில் பெண்குழந்தைகள் அதிகமாகப் பிறக்கிறதென்றும், கணித்திருக்கிறார்கள். இக்காரணம்பற்றியே சரீரஉழைப்பு அதிகமாகவுள்ள ஏழைகள் வீட்டில் ஆண்குழந்தைகள் அதிகமாக வுண்டென்றும், அவ்வித வேலையில்லாத தனிகர்களின் வீட்டில் பெண்குழந்தைகள்

அதிகமாகவோ அல்லது குழந்தைகளே இல்லாமலே போகின்றனறும் அறிந்திருக்கிறார்கள். உண்வு குறைந்தும்; தொழில் அதிகப்பட்டும் இருக்குமாகில் குழந்தை உற்பத்தியே ஆகாது. உழப்படும் பசுமாடு ஈனுது என்பது நம்மெல்லோரும் நன்கறிந்த விஷயம். நமது தேசத்தில் கிருஷித் தொழில் ஜீவனத்திற்கு முக்கியமானதாகவிருப்பதால்,அக்கிருஷித்தொழிலில் பசுமாடு இன்றியமையாத சாதநமானதால், பசுமாடு அபிவிர்த்தியானல் தான் தேசத்திற்கு க்ஷேமமுண்டாகுமென்று நினைத்து பசுவைக் கட்டி உழுதல் பாபம் என்று மதித்திருக்கிறார்கள். “வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்” என்று திருஞான சம்பந்தசுவாமிகள் கூறியுள்ளது இங்கு கவநிக்கத்தக்கது. தேன் கூட்டில 3 விதமான தேனீக்கள் இருக்கின்றன பெண்,ஆண், அலி, என்பவைகளாம் அலிகள் பெரும்பான்மைபானவை. ஆண் ஒன்றே, பெண் ஒன்றேயாம். குறைந்த உணர்வால் அலிகளும், கொஞ்சம் அதிக உணவால் ஆண்களும், மிகவும் அதிக உணவால் பெண்களும் உண்டாகின்றன. ஒரோர்காலத்தில் ராணியாகிய பெண் தேனீக்கு அபாயம் நேரிடவே, அலிகளெல்லாம் சபைகூடி யோஜனைபண்ணி தேன் கூட்டு அறைகளிலுள்ள கருக்களில் கொழுத்த ஒரு கருவையெடுத்து பிரத்தியேகப்படுத்தி அதற்கு அதிக உணவு கொடுத்து அதைப் பெண் தேனீயாக உண்டு பண்ணுகின்றன. இதனுல் ஆண் பெண் விவஸ்த ஏற்படுதலுக்கு உணவு குறைதலும் அதிகப்படுதலும் ஒரு முக்கியமான காரணமாயிருக்கிறதென்றறிகிறோம். ஔவை பிராட்டியாரும், இவ்வுண்மையைத் தெரிந்து தான்,புருஷ சந்தாநம் அடையவேண்டுமாயின் “உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு” எனக் கூறியுள்ளார் என்பதையறிக.

———

சிவராயன்.

# * சீனதேசத்தைப்பற்றிய சில விஷயங்கள்.

1. உலகத்திற்குள் ஜன அடர்த்தியான தேசங்களுள் சீனதேசமானது முதன்மையானதென்று சொல்லலாம். அதன் விஸ்தீர்ணம் 15 லக்ஷம் சதுரமையில்; ஜனத்தொகை 40 கோடி ஜனங்கள். எங்கே பார்த்தாலும் தோட்டமும் துறவும், வீடும் குடிசையும், அரண்மனையும் மாளிகையும் இருக்குமேயல்லாமல் ஒரு மனிதன் கால் வைப்பதற்குக் காலியான இடமில்லையாம். ஒரு பந்தல் போடவேண்டுமென்றால் நஞ்சை நிலங்களின்மேல்தான் போடவேண்டும். வசிப்பதற்கு இடம் போதாமல், நதிகளிலும் ஓடைகளிலும் சிறுசிறு படகுகளை நங்கூரம்போட்டு நிறுத்தி வீடுகளாக வைத்துக்கொள்ளுகிறார்கள்.

2. வேடிக்கை விநோதக் காக்ஷிகளுக்காக சொற்ப இடமேனும் காலி போட்டிருப்பதாகக் காண முடியாது. தேசம் முழுதும் தோட்டம்போல் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. ஒரு காலியான மேடும் இன்றும்; காலியான பள்ளத்தாக்கும் இன்றும். சீனர்கள் உணவுக்குப் பிரயோஜனமில்லாத ஒரு பூண்டும் உண்டாக இடம் கொடுக்கின்றார்களில்லை. உண்டாகின்ற ஒவ்வொரு செடியும் உணவுக்காகவே காப்பாற்றப்படுகின்றது. புற்பூண்டு, மரம், செடி, கொடி, தழை எல்லாம் குழந்தைகளைப் போலவே பாதுகாக்கப்படுகின்றன.

3. கிராமம் கிரமமாய் எங்கே எங்கே பார்த்தாலும், அழகுக்கென்ற தோட்டங்களும் (Ornamental garden), விளையாட்டுக் கேற்பட்ட மைதானங்களும் (Lawns and greens), சுகமாய்க் காலக்கழிப்பதற் கேற்பட்ட நந்தவனங்களும், (Flower gardens), விளையாட்டுக்கேற்ற நிழல் மரங்களும் (Shady trees), இத்தேசத்திலில்லையாம்.

4. உணவிற்கு உபயோகப்படக்கூடியவாறு எல்லா ஜீவராசிகளும் பயிர்ச்சி செய்யப்படுகின்றன. உணவிற்குரிய செடி கொடிகளில்லாத விருதாவான நீர்ப்பரப்புக்கிடையாது. எல்லா பட்டணங்க

---

* குறிப்பு இது ஒரு ஆங்கிலப் பத்திரிகையினின்று சுருக்கி எழுதப்பெற்றது.

ளின் குப்பை முதலியவைகளும், மனித, மிருக கஷ்டங்களும் பக்தோபஸ்தாய்ச் சேகரிக்கப்பட்டு மிகவும் புத்தி சாதுர்யத்துடன் கிருஷித் தொழிலில் பலவாறான பயிர்களுக்கு சமயோஜிதமாய் உபயோகிக்கப்படுகின்றன. சமுத்திரத்திலுண்டாகும் எல்லா ஜீவஜந்துக்களும், எல்லா ஒஷதிகளும், சீனர்களுடைய புத்தி நுட்பத்தால் பலவாறான உணவாக அமைக்கப்படுகின்றன. கடற் பாசமும் இவ்வாறு உபயோகமாகின்றது. பலவித கிளிஞ்சில் மாமிசமென்ன, ஒரு மழைக்குப் பிற்பாடு உண்டாகிச் சொற்பநாள் ஜீவிக்கும் காளான்களென்ன, சர்க்கரைவள்ளி முதலானவைகளின் கொடிகளென்ன, ரஸ்தாவின் இரு பக்கத்திலுள்ள பள்ளங்களில் காணப்படும் சிறுவிரல் பரிமாணமுள்ள சிறு மீன்களென்ன, இவைபோன்றஜீவராசியில் அற்ப இனங்கள்கூட உண்டியாக உபயோகமாகின்றனவாம்.

5. எல்லாப் பிராணிகளின் எல்லா மாமிசமும் சீனர்களுக்கு உருசியான உணவாம். எலி, பூனை, பாம்பு, பல்லி இவைகளின் மாமிசம், பட்டு எடுத்த பிற்பாடு பட்டுப்பூச்சியின் மாமிசம், வேலைசெய்து ஓய்ந்து, ஜீவனமாத்திரம் வைத்துக்கொண்டிருக்கும், கோவேறு கழுதை, குதிரை, ஒட்டகை இவைகளின் மாமிசமும், தானுக இறந்துபோகும் பசு, பன்றி இவைகளின் மாமிசமும், சீனர்களுக்கு ருசியான உணவாம். காண்டன் (Canton) என்ற மாகாணத்தில் எலியையும் பூனையையும் பக்குவம்பண்ணி உணவாகக் கடைகளில் வெளிப்பக்கத்தில் விற்கப்படுகின்றனவாம். இறந்துபோன பன்றியின் தோலையும்கூடப் பக்குவமாகச்சமைத்து இனிப்பான உணவாகச் சீனர்கள் நன்கு மதிக்கின்றார்களாம். ஜநங்கள் 4 பேர் சம்பாஷணை செய்தால், சம்பாஷணையின் பெரும்பான்மையான பாகம் உணவைப்பற்றியே நிகழ்வதாகும்.

6. சீன தேசத்தில், மனிதனுக்கு உண்ணும் உணவு மிகவும் துர்லபமென்றே மேற்கண்ட விஷயங்களா லேற்படும். சுகிர்தம், சுகம் என்ற வார்த்தை இத்தேசத்திலுமுண்டோவென்றவின, இத்தேசத்தில் யாத்திரை செய்யும் அந்நிய தேசத்தானின் மநத்தில் அடிக்கடி எழும். ஜநங்கள் பசியால் வருந்துகின்றமையாலும் அக் காரணம்பற்றி ஜனங்கள் மாண்டு போகின்றமையா

லும் ஜனங்களுக்குள் இறந்துபோனவர்களான பிதுர்க்களுக்கு உணவின் அவா அதிகமாக விருக்குமென்ற நம்பிக்கை ஆழ்ந்தும் அகன்றும் இருக்கின்றது. அதனால் இறந்துபோனவனது கல்லறையிடத்தில் அவனுடைய தாய் தந்தையர்கள் முதலியவர் அநேகர் சோற்றுக்காக அலேயும் பிதுர்க்களைத் திருப்திபண்ணும்பொருட்டு பலவாருன கிரியைகளையும் கர்மங்களையும் செய்கின்ருர்கள்.

7. சந்தான உற்பத்தி விஷயத்தைப்பற்றி இந்தியா தேசத்திற்போலவே தீராத ஆவல் எங்கும் பரவியிருக்கின்றது. ஒரு சினன் பிரியத்துடன் வேண்டும் உலகப்பேறுகளில் முதன்மையில் சந்ததி; அதற்குப் பிற்பாடுதான் படிப்பையும் பணத்தையும் கோருகிருன். இது காரணமாக சைனதேசத்தில் குழந்தைகளின் பிறப்பு ஏராளமானது; அவர்களிற் இறப்பும் ஏராளமானது; 100க்கு 90 பேர் மாண்டுபோகின்ருர்கள். பத்துப் பெண்குழந்தைகளுக்கு ஒரு பெண் குழந்தை இறக்கும் போலும் தோன்றுகின்றது.

ஆத்மநாதன்.

## நன்மொழி.

---

118. "அற்றன் ருதலதுதான் மனஞ் செய்தல்
சொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனேர்த்தன்
மற்றித் தன்மை படுமாயின் மாண்பிலாக்
குற்றப் பொய்யென் றுரைப்பர் குணமிக்கார்"—
நீலகேசியுரை மேற்கோள்.

119. "தீவினை யென்பதி யாதேன வினவி
ஆய்தொடி நல்லா யாங்கது கேளாய்,
கொலேயே களவே காமத் தீவிழை
வுலேயா வுடம்பிற் ருேன்றுவ மூன்றும்,
பொய்யே குறளே கடுஞ்சொற் பயனில்
சொல்லெனச் சொல்லிற் ருேற்றுவ நான்கும்,
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி லுருப்பன மூன்றுமெனப்,பத்துவகையால்"
மணிமேகலே, 24-ம் காதை.

# நோயற்ற வாழ்வை யடையும் முறை.

அடியிற்கண்ட நான்கு விதிகளையநுஷ்டித்தால் நோயில்லாமல் வாழலாமென்று ஓராங்கில வைத்தியர் சொல்லுகின்றார்.

(1) அதிக உணவும் அடிக்கடி உண்ணுதலும் நலமன்றாம். யோகிக்கு மதியத்தில் ஒருவேளை போஜநம், போகிக்கு, அதாவது சுகமாய் உலகவாழ்வை விரும்புகிறவனுக்குப், பகலிலும் இரவிலும் சேர்ந்து இரண்டுவேளை போஜநமும் நன்றாம். உண்ணும் உணவும் மிதமாயும் சாத்துவிக உணவாகவும் இருத்தல்வேண்டும். சரீரமானது பல யந்திரங்களமைந்த ஒரு தொகுதி. அடிக்கடி உணவு உட்கொண்டால் யந்திரங்களுக்கு ஓய்வு ஒழிவு இல்லாமல் எப்போதும் தொழிற்படும்படி செய்வதாகும். அதனால் யந்திரங்களின் வலிமை குன்றி அவை வியாதிகளுக் குள்ளாகும்.

(2) இடைநடுவில் எவ்விதத் தின்பண்டமும்கூடாது. "நுண்மை நுகரேல்" என்ற ஔவையார் வசநம் இங்கு கவநிக்கத்தக்கது.

(3) உண்ணுங்காலத்தில் ஜலபாநம் பண்ணக்கூடாது. உண்டமேல் 2 நாழிகைக்குப்பிறகு ஜலபாநம் பண்ணவேண்டும். ஜீர்ணிப்பதற்கு, வாயிலும் இரைப்பையிலும் பெருங்குடல் ஆரம்பத்திலும் ஜீர்ணம் செய்விக்கும் நீர்கள் இருக்கின்றன. உணவு சம்பந்திக்கவே அந்நீர்கள் சுரக்கின்றன. அவை சுரந்து, ஊறி, உணவைத்தாக்கி, பக்குவப்படுத்தும் சமயத்தில் ஜலம் உட்கொண்டால் நலமுண்டு. அதற்குமுன் உட்கொண்டால் அது ஜீர்ணிக்கும் நீர்களுடன் கலந்து அவைகளின் சக்தியைக் குறைக்கும்.

(4) ஒரு வாரம், அல்லது ஒரு பக்ஷத்திற்குஒருநாள் எவ்வித உணவும் உட்கொள்ளாமல் சுத்தப் பட்டினியாயிருத்தல் நலம்.

ஞாந பக்தி விஷயங்களின் நோக்கத்தின்மேலல்லாமலும், தேக சௌக்கியத்தைக் கருதியும் நம் முன்னோர்கள் பலவாறான உபவாச (பட்டினி) தினங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஏகாதசி, அமாவாசை, கிருத்திகை, சோமவாரம், பௌர்ணமி முதலியன. உபவாஸம் என்றால் (ஈசுவரன் அல்லது பரமாத்மாவின்) சமீபத்திலிருத்தல். பரமாத்ம தியாநம் நன்கு நடைபெற வேண்டுமானால் பட்டினியாயிருத்தல் வேண்டும். எந்தத் தியாநத்திற்கும் மூளையில் ரத்தம் இருத்தல் வேண்டும. உணவு இரைப்பையிலிருக்குமாகில் மூளைக்கு ரதகம் போகாமல் இரைப்பையை நாடும். சரீரத்திற்குச் சோர்வு நிகழும். "உண்டால் களைப்பு தொண்டாகளுக்கு முண்டு" என்ற பழமொழி இங்கு கவனிக்கத்தக்கது. இக்காலத்திலோ உபவாஸம் என்றால் புதிய புதிய இனிய உணவுகளை உட்கொள்ளுதலென்றாகிவிட்டது. எவ்வித ஈசுவர ஆராதனையும் போஜநத்திற்கு முன் செய்தால் பலனுண்டு.

சுப்பிரமணியன்.

386

## புத்தகவரவு.

---

**கலைசைச் சிலேடை வெண்பா:**—கலைசை என்ற வூரிலிருக்கின்ற பரமசிவன் மீது, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் என்பார், சிலேடையாக (பல் பொருளுள்ள சொல் தொடர் அணியில்) இயற்றிய செய்யுள்-இதற்கு ஸ்ரீமாந் கிருஷ்ண சுவாமி பாவலர் உறை செய்துள்ளார். சில சில பாக்களுக்கு, மூன்று அர்த்தங்களும் விவரிக்கப்பட்டுள்ளன. இவ்வுரை நலமுள்ளது. இவ்வுரையின்றேல் இவ்வெண்பாக்களை சாதரண ஜநங்கள் அர்த்தம் பண்ணுதல் இயலாது. இத்தகைய புத்தகங்கள் இக்காலத்தியர்களுக்கு அதிக உபயோகமில்லாவிடினும் தமிழ் பாஷா அபிவிருத்தியை நோக்க இவைகள் வேண்டுவனவேயாம். இது நன்றாய் அச்சு இயற்றியிருக்கிறது, இதின் விலை அணா 5 தான்.

**பார்வதீயம் என்னும் பாலிகா பூஷணம்:**— இது கதா ரூபமாக, செய்துள்ள விவேக நூல். இதின்கண், யுவதிகளும், தருணிகளும் பொதுவாய் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்க முறைகளும், உலக நீதிகளும், ஸ்திரீகள் பர்த்தாவினிடமும், அந்நியர்களிடமும், சுற்றத்தார்களிடமும் ஒழுகும் முறைகளும், துஷ்ட ஸ்திரீகள் துஷ்ட வாலிபர்களின் லக்ஷணங்களும் அவர்களைத் தவிர்க்கும் முறைகளும், இன்னும் ஸ்திரீகளுக்குரிய நற்குணங்களும் சீலங்களும், விவரிக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொருஸ்திரீயும் தனிமையாக வாசிக்கவேண்டிய புஸ்தகம் இது. சிற்சில வசநங்களையும், பச்சையான சிலவிஷயங்களையும் தவிர்த்திருந்தால் இந்நூல் மிகவும் சிலாக்கியமாக இருக்கும். யாவரும் படிக்கும் படியாக எளிய நடையில் இஃதுள்ளது. பாலக்காடு மேலாறுகோடு கிராமம் பிரஹ்மஸ்ரீ வேங்கடேசுவர ஐயரவர்களால் இந்நூல் இயற்றப் பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 8 தான். இது சென்னை கார்டியன் பிரஸ்ஸில் பிரசுரமானது.

**சுதேச வைத்திய ரத்நம்:**— இப்பெயருள்ள வைத்தியநூல் கும்பகோணத்திலிருக்கும் ஸ்ரீமான், எஸ், சந்திரசேகரர் என்பவர்களால் இயற்றப்பெற்றது. இவர்கள், பொதுவான சுகாதார விஷயங்களையும், பதார்த்தங்களின் குணங்களையும், அவைகளை வியாதிகளுக்கு உபயோகப்படுத்தும் முறைகளையும் யாரும், முக்கியமாய் நாட்டுவைத்தியர்கள் அறிந்துகொள்ளும் படி எளிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். இப்புத்தகத்தில் பிரஸ்தாபிக்கப்படும் ஔஷதங்களை உட்கொள்ளும் அளவைக்கிரமங்கள் ஆங்கில கிரமங்களுடன் நம் தமிழ் நாட்டில் வழங்கும் அளவைக் கிரமங்களும் சொல்லியிருப்பின், இப்புத்தகம் இன்னும் அதிகப் பயன்படும். இப்புத்தகத்தின் விலை ரூ 1. அதிகம். குறைந்தால் இதைப்பலரும் வாங்கிப்பயன் பெறுவார்கள்.

**சன்மார்க்கம்:**— இது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பத்தாமாண்டு நிறைவேற்றக் கொண்டாட்டக்காலத்தில் மகிபாலன்பட்டி ஸ்ரீமான் மு. கதிரேசச் செட்டியார் அவர்களால் வாசிக்கப்பெற்ற வியாஸம். சைவ சித்தாந்தத்தின் உண்மையைத் தெளிவாய், எளிய தமிழ் நடையில், அழகாய் இவ்வித்வான் பேசியுள்ளார். இது முதலில் செந்தமிழ்ப் பத்திரிகையில் வந்தது. பலருக்கும் இது நன்கு பயன்படுமாறு இப்போது தனியே வெளிப்படுத்தப் பெற்றது. அறிஞர் யாரும் படிக்கும்படியாக இதற்கு விலை ஏற்படுத்தப் படவில்லை எனத்தோன்றுகிறது. இஃது ஒரு பெரிய உபகாரம்.

**நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர் திருத்தம்:**—இதுவும் ஸ்ரீமான் மு. கதிரேசச்செட்டியார் அவர்களின் வியாஸம். மேலச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் இரண்டாம் வருஷ பூர்த்திக் கொண்டாட்ட பெருஞ்சபையில் ஷை. செட்டியாரவர்கள் செய்த உபந்நியாசமிது. மகா-ா-ா-ஸ்ரீ கதிரேசச் செட்டியார் அவர்கள் தென்மொழி வடமொழிகளில் சிறந்த வித்வான். சிறப்புவகையாக, தம் ஜாதியார்களின் பிரயோஜனார்த்தமாக இவ்வுபந்நியாசம் நிகழினும், பொதுவகையாக யாவருக்கும் இவ்வுபந்நியாசம் பயன்படக்கூடியது. சிற்சில விடங்களில், தமிழ் நடை இன்னும் எளிதாக விருப்பின், இவ்வுபந்நியாசம் அநேகம்பெயர்களுக்கு உபயோகமாக இருக்கும். சீர்திருத்தமுறையில் அநேக நல்லவிஷயங்களை ஷை செட்டியாரவாகள் விவரித்திருக்கிறார்கள். இப்புத்தகம் செட்டிகள் நாட்டில் பரவி, நற்காரியம் செய்யும் இயல்பினது. ஒவ்வொரு நாட்டுக்கோட்டை நகரவாஸியும் இதைப்படிப்பானாகில், இதிற்கண்ட சீர்திருத்தமுறைகளை அநுஷ்டானத்தில் கொண்டுவர முயலுவான். இப்படி பலர் செய்வார்களாகில், செட்டிநாடு நலம் பெறும். அதன் மூலம் நம் பாண்டிய நாடு மேன்மை அடையும். பொருட் செல்வத்துடன் கல்விச்செல்வமும் நாட்டுக்கோட்டை நகரத்தார் தம்மிடம் அமையப்பெறவாராகில் தேசம் சிரேயஸ் பெறும் என்பதில் சந்தேகமில்லை. இப்புத்தகமும் இனமாக யாவரும் பெறலாமெனத் தோன்றுகிறது.

புதுப்பத்திரிகை வரவு. **தமிழ்**—இப்பெயருள்ள புதிய மாதாந்தப்பத்திரிகை சென்ற டிசம்பர் மாதம் 12உ முதற்கொண்டு திண்டுக்கல்லில் பிரசுரமாகி வருகிறது. ஒவ்வொரு பத்திரிகையும் ஓர் ஓர் நோக்கத்தின் மேல் வெளி வருதல் நலம். அவ்விதமின்றி இதுபொதுவகையாகக்கல்வி அறிவு ஒழுக்கங்களைப் பரவச்செய்யும் ஒருமாதாந்தப்பத்திரிகையாம். இதன் வருஷசந்தா ரூ 1 தான். இதன் முதல் சஞ்சிகையைப்பெற்றோம். நல்ல தமிழ் நடையில் சில விஷயங்கள் எழுதியுள்ளன. இதன் பத்திராதிபர் ஸ்ரீமான் அ. சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள். எத்தனை பத்திரிகைகள் ஏற்பட்டாலும் அவைகள் உலாவ நம் தேசத்தில் இடமுண்டு.

பத்திராதிபர்.

# சமாசாரம்.

---

ஸ்ரீமத் ஆதி சங்கராசாரிய பகவத் பாதர் நான்கு முக்கிய ஸ்தாநங்களில் நாலு மடங்களை ஸ்தாபித்தார்கள். மைசூர் ராஜ்ஜியத்தில் சிங்கேரி மடம், ஜகந்நாதம் அல்லது புரி என்னும் க்ஷேத்திரத்தில்,கோவர்த்தந மடம், துவாரகையில் சாரதா மடம், உத்தரகண்டத்தில், அதாவது ஹிமாசலத்தில் ஜோதிர்மடம் என்பவைகள். இவைகளில், முதல் மூன்று மடாலயங்கள் ஏதோ ஒருவிதமாகவாவது நடத்தப்பட்டு ஸ்வரூபமுள்ளவைகளாக வருகின்றன. அவைகளில், தனித்தனி, குரு சிஷ்ய சம்பிரதாயப்படி இப்போதும் சந்நியாசிகள் மடாதிபதிகளாக இருந்து வருகின்றார்கள். ஹிமாசலத்திலுள்ள ஜோதிர்மடம் இப்போது, இருக்கிற இடம்கூடத் தெரியாமல் காடாக இருக்கிறது. அதை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர பாரத்மஹாமண்டல என்ற சபையின் மூலம் முயற்சிகள் நடைபெறுகின்றன.

## சீர்காழியில் பிரஹ்மஞாநசபையின் கூட்டம்.

சீர்காழியில், தஞ்சாவூர் ஜில்லாவின் பிரஹ்மஞாந கிளைச்சங்கங்களின் பெரிய சபை (Conference) சென்ற ஜனவரிமீ 20, 21 - உகளில் கூடியது. மாதுஸ்ரீ,ரான்ஸம் அம்மாள் அக்கிராசநம் வகித்தார்கள். சீர்காழி கிளைச்சபையின் தலைவராகிய மகா-ள-ள-ஸ்ரீ சிதம்பரநாத முதலியார் அவர்கள் மிகவும் பிரியத்துடனே விருந்தினரை உபசரித்து, சபையின் காரியங்களை நன்றாய்க் கொண்டுசெலுத்தினார்கள். அவர்கள் செய்த நல்வரவு உபந்நியாசத்தில் பிரஹ்மஞாந சபையின் உயர்வையும், உலகத்திற்கு அதனால் உண்டாகிக்கொண்டுவரும் பிரயோஜநத்தையும், மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மாள், மாதுஸ்ரீ ரான்ஸம் முதலான அறிஞர்கள் செய்யும் ஜநாநுகூல கைங்கரியங்களையும், சபைகள் அடிக்கடி கூடுவதால்உண்டாம் நலங்களையும் பற்றி விஸ்தாரமாக விவரித்தார்கள். மாதுஸ்ரீ ரான்ஸம் அம்மாள், செய்த உபந்நியாசத்தில், ஜந உபகாரமான எல்லா கைங்கர்யங்களும் இச்சபையின் கருத்துக்களுக்கு சம்மதமானவைகளென்றும், பலவாறான மதங்களின் உயர்நலத்தை அறிந்து அநுஷ்டிக்க வேண்டுமென்றும், ஹிந்து மதம் ஞாநக் கருவூலமாக இருக்கிறதென்றும், அதன் கண்ணுள்ள உண்மைகளை அறியவேண்டுமென்றும், ஆசரிக்கவேண்டுமென்றும்,அவைகளுக்கு உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகஞ் செய்யவேண்டுமென்றும், மதங்களின் உண்மைகளை உள்ளபடி அறிந்தால், உலகத்திலுள்ள துக்கங்கள் குறைவுபடுமென்றும், இன்னும் பலவாறாக கேட்டோர் மநம் உத்ஸாகம் பெறும்படியாக வசித்தார்கள். டேனிஸன்—என்ற ஆங்கில கவியின் கிரந்தமாகிய "இன் மெமோரியம்" என்றதினின்று வாக்கியங்களை எடுத்துக்

காட்டி, அக்கவியின் உயர்நலமமைந்த ஞானபாவங்களைப்பற்றி மகா-ள-ள-ஸ்ரீ எஸ். வி. சுப்பிரமணியஐயர் அவர்கள் யாவரும் களிக்கும்படி மிகவும் சிரத்தையுடன் ஆங்கிலத்தில் உபந்நியசித்தார்கள். அடியிற்கண்டபடி மற்றவர்களின் உபந்நியாசங்கள் தமிழில் நிகழ்ந்தன.

பிரஹ்மஸ்ரீ மதுரை ப. நாராயண ஐயர் அவர்கள்—திரிபுர தகனம் அதன் உண்மை.

ஸ்ரீமான் வி. ராமச்சந்திரநாயுடு அவர்கள்—அப்பியாசயோகம்.

பிரஹ்மஸ்ரீ லக்ஷ்மிநாராயண ஐயர் அவர்கள்—ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தின் பால்ய லீலைகள், அவைகளின் உண்மை.

ஷை தஞ்சாவூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள்—குருதர்சநம்.

மாதுஸ்ரீ ரான்ஸம் அம்மாள் செய்த முடிவுரையில். ஞாநதீக்ஷைகளின் உற்பத்தியைப்பற்றியும், சுக்கிரகிரகத்தினின்று, பூமியின்கண் 3-ம் மனிதவர்க்கம் நடைபெறும் காலத்தில் "ஜோதிர்மயமான தேவர்கள்" உலகத்திற்கு வந்து யோகசித்தியால் சரீரங்களை எடுத்து, ஞாநதீக்ஷாக் கிரமங்களை ஸ்தாபித்தார்களென்பதையும்* கால்டியா, எகிப்து முதலிய தேசங்களில் நடைபெற்ற தீக்ஷா முறைகளையும், தீக்ஷாக்கிரமங்களினால், ஒருவன் ஜநஸமூகத்திற்குக்கைங்கர்யம் செய்தலுக்குரிய தோண்டனாகிறான் என்பதையும்† பக்தி என்றால் அன்பின் மிகுதி, அதாவது ஜீவராசிகளுக்கு நலம்பட வாழ்தல் என்பதையும், உண்மையான ஞாநமின்னது என்பதையும், (ஒரேபரவஸ்து உளது, அது மூப்பான்மையாய் வியக்தப்படுகிறது, சிருஷ்டி பாலர்களாக ஸப்த பிரஜாபதிகள் ஏற்படுகிறார்கள், தேவகணங்கள் உண்டாகிறார்கள், மனிதன் ஈசுவரனின் அம்சமாக விருக்கிறான், பிரகிருதியான பாசத்திற்குட்பட்டு பல ஜன்மங்களில்உழன்று, மூன்று லோகங்களிலும் வரத்துப் போக்குள்ளவனாய் நடைபெற்ற அநுபவஞாநம் பெறுகிறான்.) ஆசுர மார்க்கங்களான, பிராணிபலி முதலியவைகளைத் தவிர்க்கவேண்டுமென்பதையும், சன்மார்க்கமுறைபற்றிஒழுகவேண்டுமென்பதையும்,அப்படி நடைபெற்றால், இனி சமீபத்தில் வரும் அவதார புருஷனை அறிந்து அவர் அநுக்கிரகம் பெறலாமென்பதையும் பற்றி விஸ்தாரமாக உபந்நியஸித்தார்கள். ஒருநாள் இரவிலும்,சந்திரஹாஸன்என்ற நாடகம்,நடந்தது. மற்றொருநாள் இரவில் சிறு பெண்குழந்தைகள் பிரிடிஷ் ராஜாங்கத்தின்

---

* மதுரை பிரஹ்மஞாநசபையின் 41-ம் தண்டுப் பத்திரிகையைப் பார்க்க,

† குறிப்பு:—"அன்பர்பணி செய்யவெனையாளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்ற தாயுமானவர் வாக்கு இங்கு கவனிக்கத்தக்கது.

வரலாற்றை, கும்மி மூலமாக அபிநயத்துடன், ஆடிப்பாடினார்கள். 102 அங்கத்தினரும் 300, பொதுஜநங்களும் கூடினார்கள். எல்லாம் விமரிசையாகக் குதூஹலத்துடன் நடந்தது. சுபம்.

ஸ்ரீமான் தோமஸ் பிளைம்:— இவர்கள் சென்ற ௴ 21௳முதல் 25௳ வரை அடியிற்கண்ட விஷயங்களைப் பற்றி, சித்திர வர்ணப்படங்களுடன், எல்லார்மனத்திலும் பதியும்படியாக,மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில்உபந்யாசம் செய்தார்கள்—(1) ஸ்வப்நங்களின் உண்மை, (2) புவர்லோகங்களும் அதின்கண் வஸிக்கிறவர்களும் (3) கடவுள் பிரபஞ்சத்தில் அந்தர்யாமி (4) மகச் சங்கற்பங்களும் அவைகளின் சக்தியும்.

௸ யார் சென்ற மாதம் 25௳முதல் 28௳ வரை சிவகங்கையில் மேற்கண்டவிஷயங்களைப்பற்றியும் மரணம் அதின் பிறகு நிகழும் சம்பவங்களைப் பற்றியும், உபந்யாசம் செய்தார்கள்.

௸ உபந்யாஸங்கள் மிகவும் பயனுள்ளவைகளாக இருந்தன.

1911-௵த்தின் ஜனக்கணக்கு விஷயம்:—நம் தேசத்தில் $31\frac{1}{2}$ கோடி ஜநங்களிருக்கின்றார்கள். அவர்களை, மதங்கள்பற்றி விவரிக்கில் அடியில் வருமாறு—

17-நாஸ்திகர்.

50-கடவுள் உளரோ இலரோ என்பதைப் பற்றிய விசாரணை பயனற்றது என்பார்.

$21\frac{3}{4}$ கோடி-ஹிந்துக்கள்.

243000-ஆரிய ஸமாஜர்கள்

5504-பிரஹ்மஸமாஜர்கள்

6 கோடியே 60 லக்ஷம்—முகம்மதியர்கள்.

1 கோடியே 5 லக்ஷம்—மரம், செடி, கொடி, கல்-இவைகளில் கடவுளை ஆராதிப்பவர்.

1 கோடியே 5 லக்ஷம்—பௌத்தர்கள் பர்மா தேசத்திலுள்ளவர்கள்.

3 லக்ஷத்து முப்பத்து மூவாயிரம்—பௌத்தர்கள் இந்தியாவில்.

15 லக்ஷம்—ஜைனர்கள் பம்பாய் ராஜதானியிலும், மத்தியமாகாணத்திலும்.

30 லக்ஷம்—சிக்கர்கள் —பஞ்சாப் மாகாணத்தில்.

1 லக்ஷம்—பார்ஸிகள்—பம்பாய் ராஜதானியில்.

21 ஆயிரம்—யூதர்கள்.

38 லக்ஷத்து 76ஆயிரம்—பலவகுப்பினரானகிறீஸ்தவர்கள். முன் 1901 ௵க் கணக்கின்படி 29 லக்ஷத்து 23 ஆயிரம் பெயர்கள் இருந்தார்கள்— இப்போது 10 லக்ஷத்து 43 ஆயிரம் அதிகமாககூடி இருக்கிறார்கள்.

பத்திராதிபர்.

# ADVERTISEMENT.

## சுதேச வைத்திய ரத்தினம்.

(இரண்டாம் பதிப்பு.)

முன் பதிப்பைக்காட்டிலும் விரிவானது.

ஆனரபிள் ஸ்ரீ திவான் பகதூர் R. ரகுநாதராவ் C. S. I. அவர்களுடைய நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது. ஐகோர்ட்டு வக்கீல் N. K. ராமஸ்வாமி ஐயர், B. A, B. L. அவர்களின் முகவுரையுடன் எழுதப்பட்டது. இப்புத்தகம் டாக்டர் S சந்திரசேகரர் அவர்களா லனேக சுகாதார விபரங்களுடனும், இன்னும் பல அருமையான விஷயங்களுடனும் நம் நாட்டிலுண்டாகும் செடி, கொடிகள், காய்கனிகள், கடை மருந்துகள் முதலியவற்றின் குணம், செய்கை, உபயோகம், உபயோகிக்கும் விதம், அவற்றைப் பல நோய்களுக்கும் உபயோகித்துக் குணங்கண்ட ஐரோப்பிய டாக்டர்மார்களின் பெயர்களுடனும், பல நூல்களின் ஆதாரங்களுடனும், ஒவ்வொரு மூலிகைகளுக்கும் தமிழ், இங்கிலீஷ் பெயர்களுடனும் அந்நோய்களுக்கு வைத்திய ருதவியின்றி நாமே செய்துகொள்ளக்கூடிய விபரங்களுடனும் சிறுவர்களுக்கு வாசிக்கக்கூடிய செந்தமிழ் நடையில் வரையப்பட்டிருக்கின்றது. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

விலை ரூ. 1—0—0 தபால் சார்ஜ் 0—3—0.

வைத்தியபோதினி:—சித்திரப் படங்களோடுகூடிய ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. தபால்சார்ஜ் உள்பட வருஷசந்தா ரூபாய் 1—0—0 தொடுவாய்ப் பகுதிகளுக்கு ஷில்லிங் 3.

மானிட ஜீவிய சிந்தாமணி அல்லது ஆண்மையின் அழிவும் அதனை அகற்றும் விதமும், இப்புத்தகம் அச்சிலிருக்கிறது. விலை ரூபாய் 1. வேண்டியவர்கள் இப்பொழுதே எழுதிக்கொள்ளவும்.

வைத்தியபோதினி ஆபீஸ், கும்பகோணம்.

## பெண் கல்வி.

சித்திரசகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின்நிலமையை உயர்த்துவதற்காகவே தோன்றியதாகும்.

இதில் ஸ்திரீகள் பலநிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் நடந்துகொள்ளவேண்டிய விஷயங்களும்தவிர, அவர்கள் சாதாரண அறிவை வளர்ப்பதற்கு அவசியமான பல சாஸ்திர சம்பந்தமான விஷயங்களும் ஒழுக்கம், குணம், கல்விமுதலியவற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய செந்தமிழில் வெளிவரும். இதற்கு விஷயங்கள் எழுதுபவர் ஸ்திரீகளேயாவர். மேம்பாடடைய விரும்பும் ஸ்திரீகள் யாவர்க்கும் இப்பத்திரிகை இன்றியமையாததாகும்.

வருஷ சந்தா ரூபாய் 2—8—0 தனிப்பிரதி அணா 4

கன்னிகை ரேவு தாயாரம்மா,

பத்திராதிபர், "பெண்கல்வி", சென்னை E.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

| | | |
|---|---|---|
| திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கோள்ளலாம். | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும். |

## உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 8 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்.

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரியசெட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்,

வெள்ளைபட்டு வேஷ்டிகள் :—சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள், கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷகம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| முழம். | அகலம். | ரூ. | முதல். | வரை | முழம். | அகலம். | ரூ. | முதல். | வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | $2\frac{1}{2}$ | 7 | ,, | 9 | 8 | 3 | 12 | ,, | 18 |
| 6 | 3 | 10 | ,, | 12 | 9 | 3 | 14 | ,, | 20 |
| 7 | $2\frac{1}{2}$ | 8 | ,, | 12 | 10 | 3 | 15 | ,, | 22 |
| 7 | 3 | 10 | ,, | 14 | | | | | |

விலாஸம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

---

## ஸ்ரீ பரமேஸ்வர திருவுருவப்படம்.

வர்ணத்துடன் போட்டோக்கிராப்பில்

எடுத்திருப்பதாகிய படம், சைவசமயிகளாகிய பக்தர்கள் ஒவ்வொருவர் வீடுகளிலும் மடம் சத்திரமுதலிய இடங்களிலும் வைத்துப் பூசிப்பதற்குமிகச்சிறந்ததென்பது திண்ணம். இப்படம் வேண்டியவர்கள் அடியிற்கண்டவிலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். தபாற்செலவு வேறு. படத்தின் அளவு 24 × 20, அங்குலம் உள் அளவு 17 × 13, படம் 1-க்கு கிரயம் ரூ 0—12—0.

சு. சந்திரசேகரம் பிள்ளை,

ஆர்டிஸ்டு & போட்டோகிராப்பர், அருந்தவம்புலம், நீர்முளைபோஸ்டு,
திருத்துறைப்பூண்டி தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா.